Registered as a Newspaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை–06 | 18–04–2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை –60



படைக்குள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒரூனி
நேர்த்திகள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
(சி-9440)
R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.


# சு.கட்சி–ஜே.வி.பி முறுகல்நிலை நீடிப்பு

# சத்தியப்பிரமாணவைபவம் நேற்றும் தோல்வி

## – மகாவலித்துறையை வழங்க சு.க.தொடர்ந்து மறுப்பு

**சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான விட்டுக்கொடுக்காத தன்மையால் ஜே.வி.பி.யின் அமைச்சர்கள் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்றும் தோல்வியில் முடிவடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. மகாவலித்துறையை விட்டுக்கொடுக்க சு.க. மறுத்தமையினாலேயே இவ்வாறு தோல்வி ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

நேற்றுக் கண்டியில் நடைபெற்ற இரு கட்சிகளுக்கும் இடையிலான மேற்படி சந்திப்பில் ஜே.வி.பி.க்கு வழங்கப்பட்டுள்ள விவசாய அமைச்சில் மகாவலித்துறையை வழங்குவதற்கு சுதந்திரக்கட்சி இணங்காத நிலையிலேயே சந்திப்பு தோல்வியில் முடிவடைந்தது.

இதனால் இரு கட்சிகளுக்கும் இடையிலான முறுகல் நிலை மேலும் தீவிரமடைந்துள்ளது.

இது இவ்வாறிருக்க இரு கட்சிகளும் இணக்கப்பாடொன்றுக்கு வந்துள்ளதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் இது தொடர்பில் மாறுபட்ட தகவல்களே வெளியாகியுள்ளன.

இதேவேளை இணையத்தளச் செய்தி ஒன்று அமைச்சரவை உறுப்பினர்கள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் எழுந்திருந்த முரண்பாடு நேற்று இரவு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் ஜே.வி.பி. உறுப்பினர்களுக்குமிடையே இடம் பெற்ற விரிவான பேச்சுவார்த்தைகளை அடுத்து முடிவுக்கு வந்துள்ளதாகவும் மாற்றியமைக்கப்பட்ட அமைச்சரவை உறுப்பினர்களும் பிரதி அமைச்சர்களும் அடுத்த இருதினங்களில் பதவி ஏற்பது என இப்பேச்சுக்களின்போது முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அநேகமாக இப்பதவியேற்பு வைபவம் திங்கட்கிழமை நடைபெறும் என்றுதெரிவிக்கிறது கண்டி யிலுள்ள சனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர். ரில்வின் சில்வா, பாராளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவன்ச பாராளு மன்ற உறுப்பினர்களான நந்தன (8ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி.யினரின் அலுவலகங்களுக்கு கடற்படை, பொலிஸ் பாதுகாப்பு

யாழ். தீவகப்பகுதியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரின் அலுவலகங்களுக்கு கடற்படையினரதும், பொலிசாரினதும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களாக தீவகப்பகுதியில் ஈ.பி.டி.பியினருக்கு எதிராக பொதுமக்கள் காட்டிவரும் பலத்த எதிர்ப்புக்களை யடுத்து இவர்களது முகாம்களுக்கான பாதுகாப்பில் கடற்படையினரும், பொலிசாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அனலைதீவுப் பகுதியில் கடந்த வாரம் ஈ.பி.டி.பியினரின் முகாமைப் பொதுமக்கள் தீ வைத்துக்கொழுத்திய அதேவேளை தற்போது அந்த முகாமுக்கு பொலிசாரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பகுதிகளில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி முகாம்களுக்கு கடற்படையினரதும், பொலிசாரினதும் பாதுகாப்பு .வழங்கப். (8ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு- அம்பாறை மாவட்டங்களில் வரி அறவீடுகள் இடைநிறுத்தம்

### கௌசல்யன் அறிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் மறு அறிவித்தல் வரை வரி அறவீடுகள் இடம்பெறமாட்டாது என மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் அறிவித்துள்ளார்.

தமிழீழ தேசிய நிதிக் கொள்கைக்கு அமைவாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கௌசல்யன், வரி அறவீடு தொடர்பாக பின்னர் உத்தியோக பூர்வமாக வர்த்தகர்களுக்கு அறியத்தரப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களின் வர்த்தகர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே மாவட்ட அரசியல்துறைப் பொறுப் (8ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. கடலுக்கு தொழிலுக்குச் சென்ற இரு மீனவரைக் காணவில்லை

முல்லைத்தீவு கடற்பரப்பில் மீன் பிடிக்கசென்ற இரண்டு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெறறது.

முல்லைத்தீவு சிலாவத்தையைச் சேர்ந்த இ.கமலநாதன்மை அன்ரனி ஆகிய இருவருமே காணாமல் போனதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் காலை தொழிலுக்கு சென்றதாகவும் இவர்கள் நேற்றுவரை கரை திரும்பவில்லை என்றும் போர் நிறுத்த கண்காணிப்பு குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்களைத் தேடும்பணியில் கடற்றொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டபோதும் நேற்றுமாலைவரை எந்தவித பலனும் கிடைக்கவில்லை என முல்லை மாவட்டகடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

## கேணல் சொர்ணம், கேணல் பானு மட்டக்களப்பு பகுதிக்கு விஜயம்

துரோகி கருணாவின் பிடியில் இருந்த மட்டக்களப்பு அம்பாறை மாவட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளால் இரத்தம் சிந்தாது மீட்கப்பட்டதையடுத்து, தேசியத் தலைவரின் பணிப்பின் பேரில் மூத்த தளபதிகளான கேணல் பானு, கேணல் சொர்ணம் ஆகியோர் நேற்றுமுன்தினம் மட்டக்களப்பிற்கு வருகை தந்திருந்தனர் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேசியத் தலைவர் அவர்களின் பணிப்பின் பேரிலேயே, துரோகி கருணா கும்பலால் மக்கள் பட்டதுன்பங்களை அறிந்து கொள்வதற்காகவும், அவர்களைச் சந்தித்து ஆறுதல் தெரிவிப்பதற்காகவுமே தாம் வந்துள்ளதாக அவர்கள் பொதுமக்களிடம் தெரிவித்தனர். மேற்படி இருவரும் மட்டக்களப்பு மாவட்டத் (8ஆம் பக்கம் பார்க்க)

## 18 வயதிற்குக் குறைந்த 31 பேர் யுனிசெப்பிடம் புலிகளால் ஒப்படைப்பு

31 சிறுவர்களை தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்று "யுனிசெப்" பிரதிநிதிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் சம்பூர் அரசியல்துறை அலுவலகத்தில் வைத்து இவர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த கையளிப்பு நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக், புலிகளின் சமாதானச் செயலகப் பிரதிப் பணிப்பாளர் பவானந்தன் மற்றும் விடுதலைப்புலிகளின்அரசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா ஆகியோருடன் யுனிசெப்பின் திருகோணமலை மாவட்ட பிரதிநிதிகபிரியெலா, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை மாவட்ட பிரதிநிதியான பற்றிக் கோல்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கோஷ்டி மோதல் மூவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டு சுரணைவடியூற்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் சிலர் காயமடைந்துள்ளனர்.

இதில் படுகாயமடைந்த மூவர் மட்டு. போதனா வைத்தியசாலையில் (8ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவுடன் இணைந்து செயற்பட்டோருக்கு தண்டனை ஏதும் வழங்கப்போவதில்லை

### -மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ்

கருணாவுடன் இணைந்து செயறபட்டவர் எவரையும் நாம் தண்டனைக்கு உட்படுத்தவோ விலக்கி வைக்கவோ, துன்புறுத்தவோ போவதில்லை. இவ்விடயத்தை கண்டிப்பாக மனிதாபிமான ரீதியாக அணுகும்படி எமது தலைவர் எம்மைப் பணித்துள்ளார். மட்டு மாவட்டத்திலிருந்து வெளியேறிய கருணாவின் சகாக்கள் எம் மைத் தொடர்புகொண்டார்கள் அவர் கள் எல்லோரும் திரும்பி வந்து கொண்டிருகிறார்கள் என மட்டு-அம்பாறை விசேட தளபதி ரமேஸ் தமிழ் நெற்றிற்குத் தெரிவித்துள்ளார்.

"மீனகம்" பாசறையில் வைத்துக் கடந்த வெள்ளிக்கிழமை அவர் மேலும் தெரிவிக்கையில், சட்டம், ஒழுங்கு, நீதி நிர்வாக அமைப்புகளை மீண்டும் நாம் ஆரம்பிப்போம் படைப்பிரிவுகள் தேசிய விடயங்களில் கவனம் செலுத்தும், சமூக விடயங்களில் அது தலையிடாது சட்டம் ஒழுங்கு நீதிநிர்வாகக் கட்டமைப்புக்கள் ஊடாக சிவில் சமூகம் பலப்படுவதை கருணா ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழீழ நீதி நிர்வாகத்துறை தமிழீழக் காவல்துறை மட்டு-அம்பாறை மாவட்டங்களில் விரைவில் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் என அவர் தெரிவித்தார்.

## தியாகி அன்னைபூபதியின் 16ஆம் ஆண்டு நினைவுநிகழ்வு தாயகம் தழுவிய ரீதியில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு



அன்னைபூபதியின் 16ஆம் ஆண்டின் 29 ஆம் நாள் நிகழ்வுகள் நேற்று தயாகம் தழுவிய ரீதியில் தேசியக்கொடி யேற்றலுடன் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் கிளி.கந்தசுவாமி கோயில் முன்பாக அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் தேசியக் கொடியினை ஊரக வளர்ச்சித்திட்டப் பொறுப்பாளர் அன்பரசன் ஏற்றிவைத்தார். அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை வர்த்தக சங்கஇணைப்பாளர் அணிவித்தார். சிறப்புரையினை அன்பரசன் வழங்கினார்.

உடையார்கட்டு மூங்கிலாறு மட்டு அம்பாறை மாவீரர் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வு ஜெயந்தன் படையணி போராளி தியாகு தலைமையில் நடைபெற்றது.

முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வில் பொதுச் சுடரினை சுதந்திரபுரம் கிராம சேவையாளர் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசிக்கொடியினை போராளி சறோதயன் ஏற்றிவைத்தார்.

முன்னதாக ஆரம்பமான அடையாள உண்ணாவிரதம் 2 மணிக்கு முடித்து வைக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் இந்நிகழ்வை சிறப்பான முறையில் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக குடாநாடு பூராவும் சிவப்பு மஞ்சள் கொடிகளால் கட்டப்பட்டு எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

(8ஆம் பக்கம்பார்க்க)

## திருமலைக்கு ஹெவ்டே விஜயம்

(திருகோணமலை)

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர்ஜெனரல் டிருஹொன்ஹெவ்டே நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தார். சிறிலங்கா இராணுவத்தின் திருகோணமலை மாவட்டக் கட்ட (8ஆம் பக்கம் பார்க்க)

# முன்பள்ளி கல்விக்கொள்கை ஒன்று வடக்கு கிழக்கில் மட்டுமே உள்ளது

## - முன்பள்ளி க.மே.நிலையச் செயலாளர்

"இலங்கையிலேயே, வடகிழக்கு மாகணத்தில் தான் முன்பள்ளிக் கல்விக் கொள்கையொன்று உருவாக்கப்பட்டு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது" இவ்வாறு வடகிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்விமேம்பாட்டு நிலையச் செயலாளர் கா. கணேசலிங்கம் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய திருகோணமலை வலயக் கட்டமைப்பைத் தெரிவு செய்யும் கூட்டத்தில் பங்குபற்றிப் பேசும் போது தெரிவித்தார்.

திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு, தமிழர் புனர்வாழ்வுக் கழக திருமலை மாவட்டத்திட்ட அலுவலர் வே.கலைவர்ணன் தலைமை வகித்தார்.

கணேசலிங்கம் தொடர்ந்து பேசுகையில் "இலங்கையிலேயே முன்பள்ளிக் கல்விக் கொள்கை என்று ஒன்றுமே இல்லை பல்வேறு நிறுவனங்கள் தங்களுக்கு ஏற்ற விதத்தில் பாடவிதானங்களைத் தயாரித்து செயல்படுகின்றன வடக்கு கிழக்கு மாகணமுன்பள்ளிக் கல்வி மேன்பாட்டு நிறுவனம் 1992 தொடக்கம் 1994 வரையான இரண்டு வருடகாலத்தில் ஆய்வு ஒன்றினை மேற்கொண்டு முன்பள்ளிக் கல்விக்கென்று கொள்கைத்திட்டம் ஒன்றை உருவாக்கியது இலங்கையிலேயே வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு தான் முன்பள்ளிக் கல்விக்கென தனியான பிரதிநிதியை உருவாக்கியது முன்பள்ளிக் கல்விக்கென தனி உதவிப் பணிப்பாளர்களும் இலங்கையிலேயியிலேயே வடக்கு கிழக்கு மாகணத்தில் தான் நியமிக்கப்பட்டுள்ளனர் வடக்கு கிழக்கில் முன்பள்ளிக் கல்விக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை அறிந்து கொண்ட சர்வதேச சமூகம் இப்போது அதற்கு உதவமுன்வந்துள்ளது" என்று தெரிவித்தார்.

2004ம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகணத்தில் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு அபிவிருத்தித் திடடங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான உறுதிமொழிகளை சர்வதேச நிறுவனங்கள் எழுத்துமூலம் வழங்கியுள்ளன போருட் நிறுவனம் ஐந்து வருடகால ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது என்றும் கணேசலிங்கம் தெரிவித்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழக தம்பலகமம் இணைப்பாளர் நல்லசிவம் திருமலைக்கல்வி வலய முன்பள்ளிக்கல்விக்கான உதவிப்பணிப்பாளர் எஸ்.தவநாதன் மற்றும் பலரும் பேசினர் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்பள்ளிக் கல்விக்குப் பொறுப்பான கல்வி அதிகாரி செல்வி ஜெயா தம்பையாவும் நிகழ்வில் பங்குபற்றினார் வலய நிர்வாகத் தெரிவு பின்னர் இடம் பெற்றது. (25)

# கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கக்கூடிய ஊழியர் தேவை

(அலுவலகசெய்தியாளர்)

வெகுவிரைவில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கையினை தமிழீழ சுகாதார சேவைகள், பிரதேச சபைகள், சுகாதார திணைக்களங்கள் ஆகியவை மேற்கொள்ளவுள்ளன.

இதற்கென கட்டாக்காலி நாய்களைப்பிடித்து அழிக்கக்கூடிய திறமை உள்ளவர்கள் இம்மாதம் 24ம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயர்களை அவ்வப் பகுதியில் உள்ள தமிழீழ சுகாதார நிலையங்களிலோ அல்லது இணைப்பாளர்களிடமோ பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். ஒரு நாயைஅழிப்பதற்கான தொகை நேரில் பேசி தீர்மானிக்கப்படுமென தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (சோ,ஸ்)

# மருதங்கேணி சமுர்த்தி வங்கிக்கு புதிய கட்டடம் அமைப்பு

(வடமராட்சி)

யாழ் மாவட்டத்தில் முதலாவது சமுர்த்தி வங்கியாக திறந்துவைக்கப்பட்ட மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுக்கான வங்கிக் கட்டடம்10லட்சம் ரூபாசெலவில் அதற்கென ஒதுக்கப்பட்ட அரச காணியில் மருதங்கேணி ப.நோ.கூ. சங்க தலைமைப் பணிமனைக்கு அண்மையில் அமைக்கப்பட்டு வருகின்றது இக்கட்டட வேலைகள் முழுமையாக முடிவடைந்தவுடன் வங்கி வேலைகள் யாவும் இந்தக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்படும். தற்போது இவ்வங்கி தனியார் கட்டடம் ஒன்றில்தான் இயங்கிவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# முல்லை. கழகங்களுக்கிடையே விளையாட்டுப்போட்டி ஏற்பாடு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப போட்டிகள் எதிர்வரும் 4ஆம்,5ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இவ் விளையாட்டு விழா தொடர்பாக கடந்த வியாழக்கிழமை நடைபெற்றமுல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையிலான கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இவ் விளையாட்டு விழாவை முல்லைத்தீவு பொது விளையாட்டுமைதானத்தில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. (20)

# யூரியாவின் விலை 200 ரூபாவால் குறைப்பு

(கொழும்பு)

யூரியா பசளையின் விலையை 200 ரூபாவால் குறைக்க அரசு தீர்மானித்திருப்பதாக ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி தற்போதைய நிதிஅமைச்சர் சரத் அமுனுகமவுக்கும் அமைச்சு அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி யூரியாவின் விலை உடனடியாக 200 ரூபாவால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வரசினால் தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளின் படி இது ஐ.ம.சு முன்னணி அரசு எடுத்த முதல்படி என சுட்டிக் காட்டப்படுகிறது. அத்துடன் கடந்த ஐ.தே.முன்னணியரசு 350 முதல் 1000 ரூபா வரை பசளையின் விலையை அதிகரித்தால் தென் பகுதி விவசாயிகள் அமைப்பு உறுப்பினர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தமையும் அப்போது அநுரா பண்டாரநாயக்கவின் வேண்டுகோளின் பேரில் உண்ணாவிரதம் கைவிடப்பட்டமையும் குறிப்பிடத்தககது.

# மருதங்கேணிச் சந்தையை புனரமைக்க நடவடிக்கை

(வடமராட்சி கிழக்கு )

வடமராட்சி கிழக்கில் உள்ள ஒரே ஒருபொதுச்சந்தையான மருதங்கேணிபொதுச்சந்தை 20லட்சம் ரூபா செலவில் கட்டப்படவுள்ளது. இந்த வருடம் யாழ் மாவட்டத்தில் புனரமைப்பு செய்யப்படவுள்ள கட்டிடங்களில் இந்த மருதங்கேணி பொதுச் சந்தையும் கட்டப்படவுள்ளது. தற்போது இந்தச் சந்தை மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளது. மீன் சந்தை, மரக்கறிச் சந்தை ஆகிய இரு கட்டிடங்கள் கட்டப்படவுள்ளன. (11)

# மன்னார் ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்து ஆளணிப் பற்றாக்குறை

(மன்னார்)

மன்னார் ஆதார வைத்தியசாலைக்கு தொடர்ந்து ஆளணிப்பற்றாக்குறை நிலவியே வருகின்றது. தாதிமார் சிற்றூழியர்கள் வைத்தியர்கள் எனப் பல வெற்றிடங்கள் இருக்கின்றன. இருந்தும் அவை இதுவரையும் நிரப்பப்படாமையால் நோயாளர்கள் பெரும் சிரமத்திற்குட்படுகின்றனர்.அத்துடன் புதிதாக வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டிபழுதுபட்ட போதிலும் அதைத்திருத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பது குறிப்பிடத்தக்கது. (மி)

# நரம்பியல், இருதயவியல், புற்றுநோய் நிபுணர்கள் யாழ்.வைத்தியசாலையில் இல்லை

## -நோயாளர் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நரம்பியல், இருதயவியல் மற்றும் புற்றுநோய் ஆகியவற்றிற்கு சிகிச்சையளிப்பதற்கு நிரந்தர வைத்திய நிபுணர்கள் இல்லை.

இதனால் மேற்படி நோய்களினால் பாதிக்கப்படுவோர் சிகிச்சை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து யாழ்ப்பாணத்திலுள்ள பல பொது அமைப்புக்கள் சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்த போதும்இதுவரையும் வைத்திய நிபுணர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

இதனால் மேற்படி நோய்களினால் பாதிக்கப்படும் நோயாளர்கள் பெரும் பணம் செலவழித்து கொழும்புக்கு சிகிச்சைக்காக செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

# சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகள் நடத்த ஏற்பாடு

இவ் ஆண்டுக்கான இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகள் வழமைபோல அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ளன. மேற்படி தேர்வுகள் எதிர்வரும் 24-ம் திகதி முதல் 26-ம் திகதி வரை யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளன. பரீட்சார்த்திகளுக்கு பிரவேச அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன.

இளஞ்சைவப் புலவர் தேர் வுக்கு 75 பேரும் சைவப்புலவர் தேர்வுக்கு 28 பேரும் தோற்ற வுள்ளனர்.

# யாழ்.மாவட்டத்தில் குற்றச் செயல்கள் அதிகரிப்பு

## அரசு சார்பற்ற நிறுவனங்கள் அறிக்கை

யாழ்.மாவட்டத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியவர்கள் அக்கறையின்றி இருப்பதால் அம்மாவட்டத்தில் கொள்ளைகளும், களவுகளும், சட்டத்தை மீறும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன என்று யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போதுகொள்ளைகள், களவுகள் வழமையான சம்பவங்களாகிவிட்டன.

மோட்டார் போக்குவரத்து விதிமுறைகளை மீறி வீதிகளில் இளைஞர்கள் வாகனங்களை செலுத்தி வருகின்றனர். இதனால் வீதிவிபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. எனவே இவற்றை கட்டுப்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் 20ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மாவட்ட அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படிக் கூட்டத்திற்கு அன்றைய தினம் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி.அரச அதிபர் தி. இராசநாயகம் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ.ஸ்)

# பொதுச்சபை கூட்டம்

(அலுவலகச் செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்த பொதுச்சபைக்கூட்டம் நாளை திங்கள் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இடம் பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அங்கத்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகளை தவறாது சமூகமளிக்குமாறு இணையத்தின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (சோ.ஸ்)

## -வட்டுவாகல் பால வீதியில்-

# தொழிலாளர்கள் படுத்துறங்குவதால் வாகனப் போக்குவரத்து சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகல் ஆற்றில் இறால் பிடிப்பவர்கள் பால வீதியில் படுத்துறங்குவதால் அப்பாலத்தினூடாகச் செல்லும் வாகனங்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.இப்பாலத்தின் அகலம் குறைவாக உள்ளநிலையில் தொழிலாளர்கள் இவ்வாறு உறங்குவதால் வாகனம் செல்வதற்கு பெரும் சிரமம் ஏற்படுவதாக வாகன ஓட்டுனர்கள் தெரிவிக்கின்றனர். (20)


## பகல் நேர இலவசக் கணினிப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்

மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தினால் நடாத்தப்படுகின்ற கணினிப் பயிற்சி நிலையத்தில் மா/போ குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கான இலவச கணினிப் பயிற்சியினை மேற்கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுடையோர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும் நேரடியாகவும் விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம்.



*பயிற்சி நெறி விபரம்*

MS Office - அடிப்படைப்பயிற்சி

Adobe Page Maker
Adobe Photoshop } - மேலதிக பயிற்சி
English

*பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி*

**மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகம்,**
**நடுவப்பணியகம்,**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி.**

*குறிப்பு:-*

*முன்பு எமது கணினி பயிற்சி நிலையத்தில் பயிற்சிநெறியினை மேற்கொண்டவர்களும் மேலதிக பயிற்சிநெறிக்காக விண்ணப்பிக்கலாம்.

*முன்னர் விண்ணப்பித்தவர்கள் தங்கள் பதிவினை நேரில் வருகை தந்து உறுதிசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*வேறு பிரதேசங்களில்வசிப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதிகள், உணவு வசதிகள் செய்து தரப்படமாட்டாது.

**விண்ணப்ப முடிவுத் திகதி :- 25.04.2004**

(சி-9452)



## முக்கிய அறிவித்தல்

ஓயாதஅலைகள் சுரண்டல் அதிஸ்டலாபச் சீட்டு மூலம் இது வரை பரிசுகளை பெற்றுக்கொள்ளாத இலக்கங்களுக்கான மீண்டும் குலுக்கல் மூலமான அதிஸ்டம் பார்க்கும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் நடாத்தமுடியாமல் போயுள்ளது என்பதனை மிகவும் மனவருத்தத்துடன் எமது ஆதரவாளர்களுக்கு தெரியப்படுத்துகிறோம். இந் நிகழ்வுக்கான திகதி பின்னர் தெரியப்படுத்தப்படும்.

**ஓயாதஅலைகள் சுரண்டல்**
**அதிஸ்டப்பணிமனை**
**நடுவப்பணியகம்**
**ஜெயந்திநகர்,**
**கிளிநொச்சி.**

(சி-9451)



ஈராக்கிலுள்ள யப்பானிய தூதரகத்தில் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருந்த தனியார் பாதுகாப்பு படையினர்.

# அதிகாரமற்ற நிர்வாகத்தை அமெரிக்கா ஈராக்கியர்களிடம் ஒப்படைக்க முடிவு

## அமெரிக்க சனாதிபதி புஷ் அறிவிப்பு

**எதிர்வரும் ஜூன்மாதம் 30ஆம் திகதி ஈராக் ஈராக்கியர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் ஆனால் அதனிடம் இராணுவ,மற்றும் வெளிவிவகார அதிகாரங்கள் ஒப்படைக்கப்படமாட்டாது என்றும், அமெரிக்க சனாதிபதி புஷ் மீண்டும் உறுதிபடக் கூறியுள்ளார்.**

இந் நிர்வாகத்திற்கு எந்த அதிகாரமும் இருக்காது. வெளிநாட்டு கொள்கைகளைத் தீர்மானிப்பதில் புதிய நிர்வாகத்திற்கு எந்த அதிகாரமும் இருக்காது.ஈராக் இராணுவம் மீதும் புதிய நிர்வாகத்திற்கு எந்த அதிகாரமும் இருக்காது/ கட்டுப்பாடும்இருக்காது.

ஈராக்கில் முகாமிட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினருள் 1 இலட்சத்து 35 ஆயிரம் இராணுவ வீரர்கள் தொடர்ந்தும் அங்கேயே இருப்பர்.

ஈராக் இராணுவத்தையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள அமெரிக்கா ஒப்பந்தம் செய்து கொள்ளும் என்றும் புஷ் கூறியுள்ளார்.

ஈராக்கின் கிளர்ச்சிவாதிகள் ஆரம்பித்துள்ள வன்செயல்களை முற்றாக அழித்தொழிப்போமென அமெரிக்க சனாதிபதி புஷ்சும், பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரும் சூளுரைத்துள்ளனர்.

வெள்ளை மாளிகையில் இவர்கள் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் கூட்டாக நடாத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஈராக்கில் கெரில்லாக்களினால் கடத்தப்பட்ட அமெரிக்க இராணுவவீரர் ஒருவரை நேற்று அல்-ஜஸீரா தொலைக்காட்சி ஒன்றில் காண்பித்துள்ளனர்.

கடந்தவாரம் இவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சமாதானப் பேச்சில் பங்குபற்ற வேண்டும் சூடான் அரசிற்கு கிளர்ச்சிவாதிகள் கோரிக்கை

(லண்டன்)

சூடான் அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற வேண்டுமென அந்நாட்டின் இரண்டு கிளர்ச்சி வாதக்குழுக்களும் நேற்று அறிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் கிளர்ச்சிவாதிகள் சமாதான பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றமாட்டார்களென அறிக் கைகள் வெளியாகிய போதிலும் அவை முற்றிலும் பொய்யானவை யென அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தியோக பூர்வமாக் நாங்கள் எந்த அறிவித்தலையும் வெளியிடவில்லை என இவ் இரண்டு கிளர்ச்சிவாதிகளின் தலைவர்களும் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க அரசாங்கமும் கிளர்ச்சி வாதக்குழுக்களும் கைச்சாத்திட்ட யுத்தநிறுத்த ஒப்பந்த நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு அவதானிகள் குழு ஒன்றை அமைப்பதற்கு ஆபிரிக்கயூனியன் நாடுகள் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக் பலூஜாவில் சமாதானத்தை ஏற்படுத்த பேச்சுவார்த்தை ஆரம்பம்?


(பாக்தாத்)

பலூஜா நகரிலும் கஜாப்பட்டினத்திலும் சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்தவென பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் கூட்டுப்படைகளின் ஜெனரல் றிச்சார்ட்மேயரே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை ரஷ்ய செய்தித் தாபனம் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்; ஷியா முஸ்லிம் மதத் தலைவரான சாபிர் அமெரிக்கப் படையினருடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு தயார் என அறிவித்துள்ளார் எனவும், ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் முன்னைய சோவியத் நாடுகளைச் சேர்ந்தவர்களும் தற்சமயம் பாக்தாத்தில் தங்கி இருப்பவர்களுமான 365பிரஜைகளை அழைத்துச் செல்லவென அனுப்பப்பட்ட மூன்று ரஷ்ய விமானங்களில் முதலாவது விமானம் பாக்தாத்தில் இருந்து புறப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.



ஸ்பெயின் குண்டுவெடிப்புத் தொடர்பாக இருவர் இஸ்ரேலிய எல்லைக்காவல்...



பலஸ்தீனத்தில் பாதுகாப்பு வேலி அமைக்கும் இஸ்ரேலின் செயற்பாட்டை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியோரில் இருவர் இஸ்ரேலிய எல்லைக்காவல் படையினரால் பிடித்துச் செல்லப்படுகின்றனர்.

விண்கலங்களைக் கொண்டு செல்லும் யப்பானிய லொக்கீட் மார்டின் அட்லஸ் 2AS ரொக்கட் விண்ணை நோக்கி பயணிக்கின்றது.

## ஸ்பெயின் குண்டுவெடிப்புத் தொடர்பாக மேலும் மூவர் கைது

(ஸ்ரான்புல்)

ஸ்பெயினில் கடந்த மாதம் இடம்பெற்ற ரயில் குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய மேலும் மூன்று பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் எகிப்து, சவூதி அரேபியா மொறோக்கோ போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது. இக்குண்டுவெடிப்புச்சம்பவங்களுடன் தொடர்புடையவர்களென இதுவரை 21 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பணயக் கைதிகளாக மேலும் இருவர்

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் வடபகுதியில் டென்மார்க் வர்த்தகப்பிரமுகர் ஒருவரையும் ஜோடான் நாட்டைச் சேர்ந்த ஒருவரையும் தீவிரவாதிகள் பணயக்கைதிகளாக பிடித்துள்ளனர்.

இதேவேளை ஈராக்கில் பணயக்கைதிகளாக இருந்த 03 செக் கோசிலாவாக்கியர்களையும் 01 கனடா பிரஜையையும் முஸ்லிம் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் விடுதலைசெய்துள்ளனர்.

# தி.மு.கழகத்திலிருந்து விலக நடிகர் ரி.ராஜேந்தர் திட்டம்

(சென்னை)

திரைப்பட நடிகர் ரி.ராஜேந்தர் தி.மு.க.விலிருந்து விலகத் திட்டமிட்டு வருகின்றார். வரும்26 ஆம் திகதி தனது ரசிகர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் கலந்தாலோசித்து முடிவை அறிவிக்கவுள்ளதாகக் கூறியுள்ளார்.

விழுப்புரம் மற்றும் விருதுநகர் மாநாடுகளுக்கு என்னை அழைக்காத நிலையில் என்னைப் பார்த்து தி.மு.க.வில் நீங்கள் இருக்கிறீர்களா? இல்லையா? என்று பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்குரிய பதிலை கருணாநிதிதான் சொல்ல வேண்டும் என்றேன்

ஆனால் இன்றுவரை கருணாநிதி அவருக்கே உரிய சாதுர்ய குணத்துடன் சாணக்கியத்துடன் மௌனம் சாதித்து வருகின்றார்.

இத்தருணத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் நான் மட்டும் ஏன் என்னை தி.மு.க.வில் இணைத்து கொள்ளவில்லை தி.மு.க.வைவிட்டுபிரிந்து வை.கோ. ம.தி.மு.க. தொடங்கிய போது தி.மு.க. ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருந்தது.

அப்போது "தம்பி நீயும் உன்னுடைய தாயக மறுமலர்ச்சி தொண்டர்களும் கலந்தாலோசித்து ஒரு நல்ல முடிவெடுத்து தாய் கட்சிக்கு வாருங்கள்" என்று கருணாநிதி அன்பு வேண்டுகோள் விடுத்தார். முரசொலியில் கட்டம் போட்டு பிரசுரித்தார் ஊரறிய வெற்றிலை பாக்கு வைத்து அழைத்துவிட்டு; இப்போது பலமானகூட்டணி அமைத்துவிட்டோம் என்ற எண்ணத்தில் நான் தி.மு.க.வில் இருக்கிறேனா? இல்லையா ?என்று கேட்டதற்கு விளக்கம் தர மறுக்கின்றார்.

இதனால்தான் நான் எதிர்வரும் 26 ஆம்திகதி இது பற்றி முடிவு செய்யவுள்ளேன். என்று அறிக்கை மூலம் ரி.ராஜேந்திர். கூறியுள்ளார்.

# பின்லேடனுடன் எச்சந்தர்ப்பத்திலும் சமரசம் செய்யப்போவதில்லை

## ஐரோப்பிய நாடுகள் அறிவிப்பு

அல்-ஹைதா இயக்கத் தலைவர் ஒஸாமா பின்லேடனுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் சமரசம் செய்து கொள்ளப்போவதில்லை. என்று ஐரோப்பிய நாடுகள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளன. இஸ்லாமிய நாடுகளிலிருந்து ஐரோப்பிய நாடுகள் தமது துருப்புக்களைத் திருப்பியழைக்குமானால் ஐரோப்பிய நாடுகளுடன் சமரசப் பேச்சு வார்த்தையின் மூலம் யுத்தநிறுத்தம் மேற்கொள்ள முடியும் என்று ஒஸாமா பின்லேடன் அறிவித்திருந்தார்.

அல்-ஜஸீரா வெள்ளிக்கிழமை ஒலிபரப்பிய ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ள குரல் பின்லேடனுடையது என்பதை அமெரிக்க சி.ஐ.ஏ.உறுப்பினர்கள் உறுதி செய்துள்ளனர். அதில் பின்லேடன் அமெரிக்காவுடன் அல்-ஹைதா எப்பொழுதும் யுத்தநிறுத்தத்தில் ஈடுபடமாட்டாது என்றும் கூறியிருந்தார்.

இது குறித்து இத்தாலிய வெளிவிவகார அமைச்சர் பிரான்கோ பெட்டினி.ஒஸாமாபின்லேடனுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவது என்பது நினைத்துப் பார்க்க முடியாதது என்று கூறியுள்ளார். ஐரோப்பிய ஆணைக்குழுத் தலைவர் ரோமேனோ புரோடி, இத்தகைய பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு அஞ்சப் போவதில்லை என்றும், சர்வதேச பயங்கரவாத அமைப்புடன் நாம் எந்த சந்தர்ப்பத்திலும் பேச்சு நடத்தப்போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

இதேபோன்று பிரான்ஸ்,ஜேர்மனி, ஆகிய நாடுகளும் பின்லேடனின் அழைப்புக்கு மறுப்புத் தெரிவித்துள்ளன.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர்,ஒஸாமா பின்லேடன் நமது அரசியல் விவகாரங்களில் தலையிட வேண்டுமென்ற அவசியமில்லை என்று கூறியுள்ளார்.இதேவேளை அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின்பவல் கூறுகையில் எவரும் பின்லேடன் போன்ற ஒரு தனிமனிதனுடன் சமாதான முயற்சியில் ஈடுபடமுடியாது.ஒரு பயங்கரவாதியுடன் எப்படி நீங்கள் சமரசம் செய்வது. என்று கேள்வி எழுப்பியுள்ளார்.




சிறை வைக்கப்பட்டுள்ள முஸ்லீம் மதகுருவை விடுதலை செய்யக் கோரும் வாசகத்துடன் ஜகார்த்தாவிலுள்ள அமெரிக்கத் தூதுரகம் முன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இந்தோனேசிய மாணவர்.

இந்தியாவின் மக்களவைத் தேர்தல் பிரச்சாரம் ஒரு யுத்தகளம் போன்று காட்சியளிக்கின்றது. தேர்தலுக்கான திகதி நெருங்கிவிட்ட நிலையில் தேர்தல் பிரச்சாரமும் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

பாரதிய ஜனதா கட்சி அணியில் 15 கட்சிகள் அணிவகுக்கின்றன. அதேபோல் காங்கிரஸ் அணியில் ஆறு கட்சிகள் கூட்டணி வகிக்கின்றன. காங்கிர சும் பாரதிய ஜனதாவும் இன்னும் யார் யாரைக் கூட்டணிக்கு இழுக்கலாம் என்று வியூகம் அமைக்காமலும் இல்லை.

அதனால் தான் முன்பு எப்போதும் இல்லாதவாறு இம்முறை மக்களவைத் தேர்தலில் சினிமா நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள் கூடுதலாக ஜொலிக்க ஆரம்பித்திருக்கின்றனர். சில சினிமா, விளையாட்டு நட்சத்திரங்கள் பிரதான கட்சிகளான காங்கிரஸ், பாரதிய ஜனதாவுடன் இணைந்தும் கொண்டுள்ளார்கள். பலர் பிரச்சாரப் பீரங்கிகளாக புறப்பட்டுள்ளார்கள்.

அதனால் தான் இம்முறை தேர்தல் களம் வித்தியாசமாக இருப்பதாக வர்ணிக்கப்படுகின்றது.

பிரச்சாரமாக தூவி வருகின்றது.

ஏனெனில் பாரதிய ஜனதா என்றால் அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் கட்சிஎனும் மனப்பதிவிலிருந்து வெளிவருவதற்கு தான் இப்போது பாரதிய ஜனதா முனைப்புக் காட்டுகின்றது.

இதேவேளை, மத்தியரசின் சாலைகள் அமைக்கும் திட்டம், வெளியுறவுக் கொள்கை என்பன காங்கிரஸைப் பொறுத்தவரை பாதகமான விடயங்கள்தான் எனும் பிரதிவாதமும் இல்லாமலில்லை.

என்றாலும்,பாரதிய ஜனதா ஆட்சியில் வறுமை என்பது குறைக்கப்படவில்லை மாறாக அதிகரித்திருக்கின்றது. என்பது புள்ளி விபரத் தகவல் அதனையும் காங்கிரஸ் கையிலெடுத்துள்ளது.

அதேநேரம் தி.மு.க. தலைமையிலுள்ள கட்சிகளில் ஒன்றான பாட்டாளி மக்கள் கட்சிக்கு சோதனை காலம் ஆரம்பம் போலுள்ளது. இது தி.மு.க. தலைமைக்கும் கூட்டணிக்கும் சிறு பாதிப்பை கூட ஏற்படுத்தக்கூடும்.

ஏனெனில் பா.ம.க. போட்டியிடும் அரக்கோணம் , செங்கல்பட்டு, திண்டிவனம், பாண்டிச்சேரி, சிதம்பரம், தர்மபுரி ஆகிய தொகுதிகளில் தோல்வியைத்தான் தழுவும் என்பது ரஜனிகாந்தின் ரசிகர்களின் சபதம்.

குகளுக்கு முன்னால் போராட்டம் நடத்திப்படத்தை தோல்விப்படமாக்கியது என்பது ரஜனியின் குற்றச்சாட்டு.

இதனையடுத்து இன்னும் ரஜனி புதிய படம் நடிக்கக் கூடவில்லை பாபாவின் தோல்வியா? அல்லது ராமதாசைப் பழிதீர்ப்பதற்கான காத்திருப்பா..? அதன் பின்னர் தான் படம் நடிப்பது எனும் அவரது வெளியே சொல்லாத பிடிவாதமா? காரணம் என்று தற்போது புதிய சந்தேகம் எழுந்துள்ளது.

இதனால்தான் பாரதிய ஜனதா

இந்தியாவில் சினிமா மோகம் அதிகம் சினிமா பைத்தியம் கொண்ட நாடு என்று தான் இந்தியா வர்ணிக்கப்படுகின்றது. தனது அபிமான நடிகரின் திரைப்படம் வெளியாகும் முதல்நாளான அன்று பார்க்க முடியாமல் போகும் போது தீக்குளிப்பதும் ரயில் தண்டவாளத்தில் தலையைக் கொடுத்து உயிர் விடும் ரசிகர்களும் இந்தியாவில் தான் அதிகம். அதிலும் தமிழ் நாட்டில் மிகவும் அதிகம்.

அதனால் ரஜனிகாந்தின் இந்த ராமதாஸுக்கு எதிரான வாஜ்பாய் ஆதரவு என்பது ஆறு தொகுதி

ராக இருந்தாலும் மக்களின் மன நிலைக் கேற்பவே செயற்பட வேண்டும். மக்களின் துன்பங்கள் துயரங்கள், பொருளாதார பாதிப்பு என்பன கட்டாயம் அவர் களின் வாக்களிப்பை நிர்ணயிக்கும் என்பதையும் தெரிந்திருக்க வேண்டும்.

அந்த வகையில், நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பாரதிய ஜனதா ஆட்சியை தக்கவைத்து கொண்டாலும் கூட அடுத்து வரும் சட்டமன்ற தேர்தல் மூலம் தமிழகத்தில் ஜெயலலிதா முதலமைச்சராக நிலைக்க முடியுமா என்பது மிக வலுவான சந்தேகமாக உள்ளது.

# சூடு பிடித்துள்ள மக்களவைத் தேர்தல்

தமிழகத்தில் நிறைகளை விட குறைகள் தான் மேலோங்கி உள்ளது.

கட்சிக்கு தான் வாக்களிக்கப்போவதாக நடிகர் ரஜனிகாந்த் முதன் முதலாக மனம் திறந்து கூறியிருப்பது புதிய சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

ஏற்கனவே நதிகள் இணைப்புத் திட்டம் என்பதன் மூலம் அரசியலுக்குள் காலடி பதிக்க நினைந்திருந்தவர் ரஜனிகாந்த் - அது சறுக்கிப் போய்விடவே இதுவரை காலமும் அரசியல் பற்றி பேசாது இருந்தார்.

தற்போது மீண்டும் அவரது அரசியல் பிரவேசம் பற்றி பேசப்படுகின்றது.

பாட்டாளி மக்கள் கட்சி எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுகின்றதோ அங்கெல்லாம் ரஜனி ரசிகர்கள் அவருக்கு எதிரான கோஷங்கள் சுவரொட்டிகள் என்பவற்றை எதிர்ப்பாக காட்டி வருகின்றார்கள்.

பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிராக ரஜனி செயற்பட முடிவு செய்துள்ளமையும், செயற்பட்டு வருகின்றமையும் என்பது பாரதிய ஜனதாவுக்கான ஆதரவைத்தான் காட்டி நிற்கின்றது.

மறுபுறம் தமிழகத்தில் ஜெயலலிதாவின் ஆட்சிக்கு வலுச் சேர்ப்பதாக கூட அமைகின்றது.

ஆனால் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் நடிகர் ரஜனிகாந்திற்கும் ஒத்துப்போகும் தன்மை

களுடன் மட்டும் நின்று விடாது. ஏனைய தொகுதிகளுக்கும் பரவ வாய்ப்புண்டு.

இதேவேளை ரஜினிகாந்த்திற்கு பா.ம.க போட்டியிடும் தொகுதிகளில் செல்வாக்கு இல்லாமலும் இல்லை. இதனை உணர்ந்து கொண்டுள்ள பா.ஜ.கட்சி ரஜினிகாந்தை வளைத்துப் பிடிப்பதில் தீவிரம் காட்டி வருகின்றது.

ஆனால் நடிகர் ரஜினிகாந்த் தான் நேரடியாக பிரச்சாரத்தில் இறங்காமல், ரசிகர்களை தூண்டிவிடுவதனால் மட்டும் வெற்றி பெற்று விடுவார் என்றும் சொல்ல முடியாது.

அதுமட்டுமன்றி மக்களின் முன்பு வைக்கப்படும் கொள்கைகள் தான் அரசியலில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கின்றன.

அப்படி இருக்கும் போது எதுவித கொள்கையுமில்லாமல் பாட்டாளி மக்கள் கட்சி தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதனால் மட்டும் ரஜினிகாந்த் வெற்றி பெறுவது இலகுவில் நடந்துவிடக்கூடிய காரியமல்ல.


அத்துடன் மக்களின் மனநிலை அறியாமல் அரசியலில் வெற்றி

விவசாயி தொடக்கம் அரச ஊழியர் வரை ஜெயலலிதாவின் ஆட்சியில் வருந்தித்தான் போயுள்ளார்கள். இந்த நிலையில், ரஜனிகாந்தின் தற்போதைய இந்த ஆதரவு அடுத்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றியளிக்கக் கூடுமா என்பதும் சந்தேகம் தான்.

அதேபோல்,லக்னோவில் இலவச வேட்டி சேலை வாங்குவதற்கான நெரிசலில் 25 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தியா உண்மையில் ஒளிருமானால், இலவச வேட்டி சேலைக்கு ஏன் மக்கள் போட்டியிட்டு மரணிக்க வேண்டும். இதுதான் இந்தியா ஒளிரும் இலட்சணமா? என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

லக்னோவில் உயிரிழப்புக்களை அடுத்து பெண்கள் அமைப்புக்கள் போராட்டம் நடத்துகின்றன.

அது மட்டுமன்றி, எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து வாஜ்பாய் லக்னோ தொகுதியில் போட்டியிடக் கூடாது என்றும் அதனை தடை செய்ய வேண்டுமென்றும் தேர்தல் ஆணையத்திடம் கேட்டுக் கொண்டுள்ளன.







# நடிகர் முதல் கிரிக்கெட் வீரர் வரை பிரச்சாரக் களத்தில்...

இதேவேளை "இந்தியா ஒளிர்கின்றது" என்பது பா.ஜ.காவின் வியூகங்களில் ஒன்று. அதாவது நாட்டின் பொருளாதாரம் முதல் கலாச்சாரம் வரையான அனைத்திலும் இந்தியா வளர்ச்சியடைந்துள்ளது. அதற்கு பிரதமர் வாஜ்பாய் தான் காரணம் என்பது பாரதிய ஜனதா

நான் ஆன்மிகவாதிதான் ஆனால் ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தை காட்டும் அளவுக்கு இன்னும் முதிர்ச்சியடையவில்லை என்பது ரஜனியின் வாதம்.

அதுமட்டுமன்றி ராமதாஸ் முற்பிறப்பில் புண்ணியம் செய்திருந்தால் மட்டுமே இம்முறை ஆறு தொகுதி

களைத் தேடிப் பார்த்தாலும் காண்பது அரிதாகத்தான் இதுவரை காலமும் காணப்பட்டது.

ஏனெனில் 1995 பாட்ஷா எனும் திரைப்படம் வெளிவந்த போது மிகவும் மோசமாக வர்ணனை செய்தவர்தான் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.

இதனை மனதில் கறுவிக் கொண்ட ரஜனிகாந்த் 1996 சட்டமன்ற தேர்தலில் ஜெயலலிதாவுக்கு ஏதிராகவும் கருணாநிதி மூப்பனாருக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்தார்.


அ. கலைவாணி

இதனால் ஜெயலலிதா வீட்டிற்குச் சென்றார். கருணாநிதியும் மூப்பனாரும் பெரும் வெற்றி பெற்றனர்.

இதிலிருந்து வெளிப்படையாகத் தெரியும் உண்மையும் ஒன்றுள்ளது. நடிகர் ரஜினிகாந்த் சினிமாவில் மட்டும் நடிக்கவில்லை. நிஜவாழ்க்கையிலும் நடிப்பவராகவே இருக்கின்றார்.

ஏனெனில் தனது திரைப்படங்கள் பிரபல்யமாக ஓடவேண்டும் தனக்கு பணமழை கொட்ட வேண்டும் என்பது தான் அவரது அடிமன ஆழமாக இருக்க முடியும்.

இல்லையேல் தனது பாட்ஷா திரைப்படத்தை விமர்சனம் செய்தமைக்காக ஜெயலலிதாவின் ஆட்சி கவிழவேண்டும் என்று முன்பு குரல் கொடுத்தார். தற்போதும் தனது பாபா திரைப்படத்திற்கு விமர்சனம் செய்த பாட்டாளி மக்கள் கட்சி தேர்தலில் தோற்க வேண்டும் என்று களமிறங்கியுள்ளார். இதுவும் ஒருவகை நேரத்திற்கேற்ற நடிப்பன்றி வேறில்லை.




பறைசாற்றும் விடயம்.

அதுமட்டுமன்றி பாகிஸ்தானுடனான உறவுக்கான முயற்சிகள், ஜம்மு-காஷ்மீரில் அமைதி முயற்சிகள் போன்றவற்றையும் தமக்கு சாதகமாக பாரதிய ஜனதா எடுக்துக் கொண்டிருக்கின்றது.

பெண்களுக்கான இடஒதுக்கீட்டு மசோதா மூலம் பெண்களின் வாக்குகளை தம்வசப்படுத்துதல் 2020 இல் அயோத்திவிடயம், பொதுசிவில் சட்டம் ,370வது பிரிவை நீக்குவது எனும் கொள்கை மாற்றம் என்பவற்றையும் பாரதிய ஜனதா

களிலும் வெற்றியீட்ட முடியும் இல்லையேல் அவர் தோற்றுப் போவாரானால் அவரது முற்பிறப்பின் புண்ணியம் முடிந்து விட்டது என்று சொல்வேன் என்று காரசாரமாக ரஜனி பேட்டி கூட அளித்துள்ளார்.

பா.ம.க்கள் கட்சித்தலைவர் மீது ரஜனிகாந்திற்கு என்ன கோபம்? ஏன் இவ்வாறு ராமதாஸை தோற்கடிக்க வேண்டும் என்று கோஷமிடுகின்றார்?

காரணமில்லாமலில்லை பாபா என்ற ரஜனிகாந்தின் திரைப்படத்திற்கு பா.ம.கட்சி மிக மோசமாக விமர்சனம் செய்தது, திரையிடப்படும் திரையரங்

என்பது நிச்சயிக்கமுடியாத தொன்று.

அந்த வகையில் 1996 ற்கு முன்னர் ஜெயலலிதாவின் ஆட்சி மீது மக்கள் வெறுப்புக் கொண்டிருந்தனர். அந்த வேளையில் ரஜினியின் குரலும் ஒலித்தது. அதனால் ஜெயலலிதா சட்ட மன்றத்தேர்தலில் தோல்வி கண்டார்.

அதேபோல் தான் இன்றும் ஜெயலலிதா சர்வதிகார ஆட்சி நடத்துவதாக மக்கள் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் ரஜினியின் ஆதரவுக்குரல் அடுத்த சட்டமன்றத்தேர்தலில் எவ்வளவு தூரம் எடுபடும் என்பது மிகப்பெரிய வினாவாகவுள்ளது.

ஏனெனில் 1996 போலவே தான் 1998 பொதுத்தேர்தலிலும் ரஜினிகாந்த் கருணாநிதி-மூப்பனார் கூட்டணிக்காக குரல் கொடுத்தார். ஆனால் கருணாநிதி மூப்பனார் கூட்டணி ரஜினியின் ஆதரவையும் மீறி தோல்வி கண்டது.

ஏனெனில் 1998 ற்கு முன்னர் கோவைக்குண்டு வெடிப்பும் உயிரிழப்புக்களும் மக்கள் மனதை காயப்படுத்தி விட்டது. அதனால் தான் கருணாநிதி- மூப்பனார் கூட்டணி தோல்வி கண்டது என்பது அரசியல் அவதானிகளின் கருத்து.

எனவே, எவ்வளவு பெரிய நடிக

அது மட்டுமன்றி, இந்தியா ஒளிர்கின்றதுதான். அது நகர்புறங்களில் மட்டும்தான். கிராமப் புறங்களில் அல்ல. அதற்கு லக்னோ சம்பவமும் உதாரணம் என்று விவாதிப்போரும் இல்லாமலில்லை.

இதனால், வாஜ்பாய் லக்னோ தொகுதியில் போட்டியிடுவதில் மிகுந்த நெருக்கடிகளை சந்திக்கவுள்ளார் என்றும் எதிர்பார்க்க முடியும்.

அது மட்டுமன்றி வை.கோ.வின் எதிர் பிரச்சாரம் என்பனவும் பாரதிய ஜனதாவை கொஞ்சம் கலக்கமடைய வைக்காமலும் இல்லை.

என்றாலும் கருத்துக் கணிப்புக்கள் வாஜ்பாய்தான் மீண்டும் பிரதமர் பதவி வகிப்பார் என்று கூறுகின்றது.

என்றாலும், அரசியலில் மாற்றங்கள் என்பது கருத்துக் கணிப்புக்களால் மட்டும் நிர்ணயிக்கப்படுவதில்லை. மக்களின் வாக்களிப்பின் சற்றுமுன்னருள்ள நிலையே தேர்தல் வெற்றியை நிர்ணயிக்கப்போகின்றது என்றால் அது மிகையில்லை.

அதற்கு ஒவ்வொரு கட்சிகளும் முன்வைக்கும் நம்பும்படியான, நடக்கக் கூடிய கொள்கைகளே பிரதான காரணமாகும் என்றும் சொல்ல முடியும். □

# தேர்தல்மூலம் தமிழர்கள் சர்வதேசத்திற்கு தெளிவான விளக்கத்தை அளித்துள்ளனர்

## -மன்னார் அரசியல்துறை அறிக்கை

**தமிழர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்து தமது ஒட்டுமொத்த ஆணையை வழங்கி உலகம் வியக்கும் வகையில்தமிழ்க் கூட்ட மைப்பினை வெற்றியடையச் செய்துள்ளனர். இவ்வாறு மன்னார் அரசியல் துறையினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.**

கடந்த இருதசாப்தங்களாக போரியல் வரலாற்றில் உலகம் வியக்கும் இராணுவவெற்றிகளை ஈட்டியுள்ளோம். இதற்காக பல்லாயிரக் கணக்கான போராளிகளை மண்ணில் விதைத்து அவர்களின் தியாகத்தாலும் எமது மக்களின் ஒருமித்த எழுச்சியின் பின்னணியிலும் இவ்வெற்றிகளை நாம் ஈட்டியுள்ளோம். இவ்வெற்றிகளின் பின்னால் "பெரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டது. ஏப்ரல் 02ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்களின் தாயகம்,தேசியம், தன்னாட்சியுரிமை, தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள், தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைமையே தமிழ்மக்களின் தலைமை என்பதை மீண்டும் உறுதிப் படுத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசிய உணர்வுடனும், பற்றுறுதியுடனும் தமிழ் மக்களாகிய நீங்கள் சிரமங்களைப் பொருட்படுத்தாது தமது ஒருமித்த உணர்வின் வெளிப்பாட்டையும் தமது வரலாற்றுக் கடமையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு செய்து சர்வதேச சமூகத்திற்கும், சிங்கள தேசத்திற்கும் தெளிவான விளக்கம் அளித்துள்ளீர்கள். இதுவரைகாலமும் எமது இனத்தின் அபிலாசைகளையும் வென்றெடுக்க முடியாமல் தடைகளை ஏற்படுத்திய சர்வதேச சமூகத்திற்கு உறுதியான நிலையையும் உணர்த்திய எமது தமிழ் மக்களுக்கு எமது தேசியத்தலைவரின் சார்பிலும் எமது அமைப்பின் சார்பிலும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

மேலும் தமிழ்மக்களின் பாதுகாப்பிற்கும், சுதந்திரத்திற்கும் வாழ்விற்கு போராடிவரும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் பக்கத் துணையாய் நின்று செயற்படவுள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு தொடர்ந்து உங்கள் ஆதரவை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### -இந்தியாவிலிருந்து திரும்பிய-

# உழைப்பாளரை இழந்த குடும்பங்களுக்கு "பாஜ்" நிறுவனம் நிவாரணம்

(அலுவலக செய்தியாளர்)

இந்தியாவிலிருந்து வருகை தந்து மீளவும் கிளிநொச்சி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மற்றும் உழைப்பாளிகளை இழந்த குடும்பத்தலைவிகளுக்கு நேற்று முன்தினம் உணவல்லாத வீட்டுப்பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டது.

யு.என்.எச்.சி.ஆர் நிதியுதவியுடன் "பாஜ்" நிறுவனத்தினரால் கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து "பாஜ்" நிறுவன அதிகாரிகளால் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பெற்ற 142 குடும்பங்களுக்கு தலா 6000 ரூபாவுக்கு கூடுதலான பெறுமதியுடைய பொருட்கள் வழங்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# இடம்பெயர்ந்த மக்களை அவர்களது வாழ்விடங்களில் குடியமர்த்துக!

## -புதிய பிரதமருக்கு யாழ்.அபி.நலன்புரிச்சங்கம் கடிதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து வாழும் மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவது தொடர்பில் புதிய அரசாங்கம் அக்கறை செலுத்த வேண்டும் என யாழ்.மாவட்ட அபிவிருத்தி நலன்புரிச்சங்கம் புதியபிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு கடந்த காலங்களில் யாழ்.குடாநாட்டை படையினர் ஆக்கிரமித்து இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள்என்ற பெயர்களில் மக்களது வாழ்விடங்களை முடக்கிவைத்துள்ளதால் பலலட்சக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர முடியாதநிலையில் அகதி வாழ்வை அனுபவித்து வருகின்றனர்.

இதனால் வலிகாமம், தீவகம், வடமராட்சி,தென்மராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள பாதுகாப்பு வலயங்களை அகற்றி அப்பகுதிகளில் படையினரால் முடக்கிவைக்கப்பட்ட மக்களின் வாழ்விடங்களை மக்கள் பாவனைக்கு விடவேண்டும் என இச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக புதிய பிரதமர் மகிந்தராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றையும் இச்சங்கம் அனுப்பிவைத்துள்ளது.

# கொல்லப்பட்ட பொதுமக்கள் நினைவாக சாவகச்சேரியில் நினைவாலயம்

## வணிகர் கழகம் ஏற்பாடு

சாவகச்சேரிப்பகுதிகளில் இடம்பெற்ற சிறிலங்காப்படையினரது குண்டு வீச்சுக்களின் போது கொல்லப்பட்ட பொது மக்களின் நினைவாக நினைவாலயம் ஒன்று நிறுவப்படவுள்ளது. சூரியக்கதிர் இராணுவநடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தையும் வலிகாமப்பகுதிகளையும் படையினர் ஆக்கிரமித்த போது அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் சாவகச்சேரியையும் அதனை அண்டிய பகுதிகளிலும் தஞ்சம் புகுந்திருந்த வேளை மக்களின் இருப்பிடங்களை இலக்கு வைத்து சிறிலங்காப்படையினர் அவ்வப்போது நடத்திய வான் தாக்குதல்களில் ஏராளமான பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

சாவகச்சேரி நகரப்பகுதியில் இந்நினைவாலயம் நிறுவப்படவுள்ளது. இதற்குரிய நடவடிக்கைகளை சாவகச்சேரி வணிகர் கழகம் மேற்கொண்டு வருகிறது. (33)

# யாழ்.சிறைச்சாலையில் அடிப்படைவசதிகள் இல்லை

யாழ்.சிறைச்சாலையில் பெண் குற்றவாளிகள் மற்றும் சந்தேகநபர்களைத் தடுத்துவைப்பதற்குரிய அடிப்படைவசதிகள் அங்கு காணப்படாமையால் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்கள் பல விதமான பாதிப்புக்களையும் எதிர்கொள்கின்றனர்.

யாழ்.குடா நாட்டில் இடம் பெற்றுவரும் பல்வேறுவிதமான குற்றச் செயல்களிலும் பெண்கள் சம்பந்தப்படுகின்ற சம்பவங்கள் சுமாராகவே காணப்படுகின்றது. இவ்வாறான குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டதன் பிரகாரம் பெண்களை விசாரணைகளுக்காவோ தண்டனைகளுக்காகவோ தடுத்துவைப்பதற்குரிய வசதிகள் யாழ். சிறையில் காணப்படவில்லை.

இந்நிலையில் பலவேறு காரணங்களுக்காகவும் சிறைத்தண்டனையை அனுபவிக்கும் பெண்களது உரிமைகள் பாதிப்படையக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளதாகவும் யாழ் மாவட்ட அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன. (33)

# சாவகச்சேரி–சரசாலை பகுதியில் துப்பாக்கிகளுடன் நடமாடும் மர்மக்கும்பல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி- சரசாலைப்பகுதியில் இரவு வேளையில் நடமாடும் மர்மக் கும்பல் ஒன்றினால் அந்தப்பகுதி மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் படையினர் வெளியேறி மக்கள் குடியேறிய குடியிருப்புப் பகுதிகளிலேயே இந்த மர்மக்கும்பலின் நடமாட்டம் காணப்படுவதாக அப்பகுதிமக்கள் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க இந்தவார முற்பகுதியில் வீடொன்றில் கொள்ளையிட முற்பட்ட கும்பல் ஒன்று வீட்டார்விழித்துக் கொண்டதும் தப்பி ஓடியவேளை துரத்திபிடிக்க முற்பட்டபோது கொள்ளையர்கள் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து எச்சரித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மன்னார் அரசியல் துறையினர் தே.எ.பேரவையினருடன் கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் அரசியல்துறையினரின் சமாதானச்செயலகத்தில் நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்திலுள்ள சகல தேசிய எழுச்சிப்பேரவை பிரதிநிதிகளுடன் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதற்கு தென்றல் மாறன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தி் மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.அமிர்தா, இனியவன், மூர்த்தி கடற்புலிகளைச்சேர்ந்த அமுதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் மன்னார் மக்கள் செய்த உதவிகளுக்கு நன்றி கூறப்பட்டது.

100 ற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இதற்கு சமுகமளித்தனர். (மி)

## இறுதிப்போட்டி 24ஆம் திகதி

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசமட்டத்திலான கழகங்களுக்கிடையே விளையாட்டுப் போட்டியின் இறுதிப் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி நடை பெறவுள்ளது. (5)

# ஐ.ம.சு.மு.இன் வேட்பு மனுக்களை நிராகரிக்குக; ஐ.தே.க வின் மனு நீதிமன்றால் நிராகரிப்பு!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வடமேல் மாகாண சபை தேர்தலுக்காக தாக்கல் செய்த மனுக்களை செல்லுபடியற்றதாக அறிவிக்க கோரி ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்துள்ளது. இதேவேளை தேர்தலைப் பின் போடுவதற்கான இடைக்கால தடை உத்தரவை பிறப்பிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டு கோளுக்கும் மேன்முறையீட்டு நீதி மன்றம் செவிசாய்க்கவில்லை.

சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட வேட்பாளர் பட்டியலில் குறைபாடுகள் இருந்ததாகக் கோரி ஐக்கிய தேசியக் கட்சி வழக்கு தாக்கல் செய்திருந்தது ஆனால் ஐக்கிய தேசிய கட்சியின் மனுவில் ஆதாரங்கள் கிடையாதென மாகாண முதலமைச்சர் அத்துல விஜயசிங்க சார்பில் ஆஜரான சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இந்த வழக்கை அன்று சோமவன்ச எச்.ஐ. இமாம் ஆகிய நீதிபதிகள் அடங்கிய குழு விசாரித்தது.

# தமிழரசுக்கட்சியின் பொதுச்சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச்சபைக்கூட்டம் இம்மாதம் 25 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவரும், யாழ். பல்கலைக்கழக பேராசிரியருமான சி.க சிற்றம்பலம் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்தில் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பாக போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களும் கட்சியின் பிரமுகர்கள், ஆதரவாளர்கள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் தமிழ் மக்களின் ஏகோபித்த அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் விதமாக கடந்த தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டியுள்ள இக்கட்சியின் தமிழ் மக்களின் எதிர்காலச் செயற்பாடுகள் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக பலவிடயங்கள் குறித்துப் பிரஸ்தாபித்து தீர்மானம் நிறைவேற்றப்படும். (33)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சிநெறி

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவின் வவுனியா வடக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் 35 ஆசிரியர்களுக்கான முதல்கட்ட வதிவிடப் பயிற்சிநெறி நேற்று முன்தினம் முதல் கனகராயன் குளம் பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வருகிறது.

வவுனியாவடக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆவிநாயகமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கினார். தொடக்க நிகழ்விற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப்பணிப்பாளர் லோரன்ஸ் திலகர், இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதிய உளவளத்திட்ட நிபுணர் செல்வி றமா, ஆவணப்படுத்துனர் சர்மா, தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் S.கணேசபாதம், வலய இணைப்பாளர் அருள்வேல்நாயகி வடக்குவலய இணைப்பாளர் மெற்லடா,கிராம சேவகர் தணிகாசலம்,(பெற்றோர் சங்க பிரதிநிதி சாந்தினி, மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டார்கள்.

இப்பயிற்சிப்பட்டறையானது தொடர்ந்தும் ஆறுமாதகாலத்திற்கு ஒவ்வொரு மாத மும் மூன்று நாட்களுக்கு வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

## வவுனியா அஞ்சலகத்தில் தேங்கிக் கிடக்கும் பொதிகள்

(ஒட்டுசுட்டான்)

தபால் மூலம் வரும் பொதிகள் வவுனியா அஞ்சலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அண்மையில் தவணைப்பரீட்சைக்கு என ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப்பணிமனைக்கு வந்த பரீட்சை வினாத் தாள்களும் தடைமுகாம் வரை வந்து திரும்பியுள்ளதாக சம்பந்தப்பட்டோர் கூறியுள்ளனர்.

# உலகளாவிய ஊழல் முறைகேடுகளுக்கெதிரான அமைப்பு

# அரச ஊழியர் நியமன ஊழலைக் கண்காணிக்க திட்டம்

(கொழும்பு)

**அரசாங்க திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் செய்யப்படுகின்ற உயர்நியமனங்கள் தொடர்பில் அவற்றைக் கண்காணித்து அதில் இடம்பெறக்கூடிய ஊழல் முறைகேடுகளை ஒழிக்கும் நடவடிக்கைகளில், "ரான்ஸ்பேரன்ஸி இன்ரர்நாஷனல் ஸ்ரீலங்கா" எனும் "உலகளாவிய ஊழல் முறைகேடுகளுக்கெதிரான அமைப்பு" ஈடுபட்டுள்ளது.**

இதற்கான செயற்பாட்டுத்தன்மையுடன் கூடியதிட்டமொன்றை வகுத்து இந்த அமைப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

அடுத்தடுத்து பதவிகளுக்கு வருகின்ற அரசியல் கட்சிகள் தமக்குரிய அரசாங்கங்களை அமைத்து தமது கட்சிகளுக்குநேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உதவியவர்களுக்கு சகல மட்டங்களிலும் உயர்பதவி நியமனங்களை வழங்கியதன் விளைவாகவே இச்செயற்பாட்டுத் திட்டம் மிக அவசியமான ஒன்றாக தம்மால் இனம் காணப்பட்டுள்ளதாக இந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தலைமைத்துவத்துக்கு சாதகமானவர்கள் என்ற அடிப்படையில் அரசியல் நியமனங்கள் வழங்கப்படக் கூடாது இந்த ஒரு தலைப்பட்சமான நடவடிக்கை நல்லாட்சிக்குப்பாதகமாக அமைந்து விடும். இது நாட்டுக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த நியமனங்களுக்கேற்ப தகுதியும் ,தகைமையும் படைத்தவர்கள் தமக்குரிய வாய்ப்பை இழக்க நேரிடும்.

ஓர் அமைச்சரவையைப் பொறுத்த மட்டில் கூடதமது சொந்த விருப்பிற் கேதுவான அரசியல் நியமனம் உசிதமானதல்ல. நடவடிக்கைத் திட்டம், பின்வரும் கட்டடங்களாக பூர்வாங்க அடிப்படையில் நடை முறைப் படுத்தப்படும்.

* அடுத்த பாராளுமன்றம் அதன் ஒழுங்கு முறை, செயற்பாடு ஆகியவை தொடர்பாக விளக்கப்படுவதற்கான பிரச்சார நடவடிக்கைகள்.

* நிரந்தர இடர்பாடுகளுக்கான விரங்கள் பாதகங்கள் ஆகியவற்றை இனம் காணுதல்.

* தற்போதைய நடைமுறைத்திட்டங்களைப்பற்றி ஆய்வு

* தேவையான அவசியமான மாற்றங்களுக்கு சிபாரிசு செய்தல்

நடைமுறை ஒழுங்கு அமைப்பில் திருத்தங்களைப் புகுத்துவதற்கான குறிப்பிட்டகால விளக்கப்பிரச்சாரம், குடிமக்கள் புத்திஜீவிகள், வர்த்தக சமூகத்தினர், நன்கொடை நல்குமுகவர் ஆகியோரின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் ஈட்டுதல்.

இந்தப் பூர்வாங்கத் திட்டம் தொடர்பாக இந்த அமைப்பு தனிப்பட்ட ரீதியில் சகல அரசியல் தலைவர்கள், சனாதிபதி, பிரதமர்,அனைத்து மாகாண சபை ஆளுனர்கள் இதர முக்கிய பிரமுகர்கள் ஆகியோருக்கு விளக்கக் கடிதங்களை ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கூட்டுறவு கிராமியவங்கிகளின் செயற்திறனை அதிகரிக்கத் திட்டம்

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள 99 கூட்டுறவுக்கிராமிய வங்கிகளின் செயற்றிறனை அதிகரிக்கும் செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்துவதற்கு நிக்கோட் அமைப்பு முன்வந்துள்ளது.

10.4 மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தவிருக்கும் இச் செயற்றிட்டம் தொடர்பான உடன் படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நாளை திருகோணமலையில் மாகாணசுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிக்கொட்சார்பில் அதன்திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசனும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் களும் உடன்படிக்கைகளில் கைச் சாத்திடுவர் என்று தெரிவிக்கப் படுகின்றது. போரின்காரணமாக பலவீன மடைந்த நிலையில் உள்ள கூட்டுறவுக்கிராமிய வங்கிகளின் செயற்றிறனை அதிகரிப்பதன் மூலம், யுத்தம் காரணமாக சீரழிந்து காணப்படும் கிராமிய பொருளாதாரத்திற்கு புத்துயிரளிப்பதும் நிக்கொட்டின் செயற்றிட்டத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

இச் செயற்றிட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவு கிராமிய வங்கிகள் அனைத்துக்கும் நவீன தளபாடங்கள், மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. நாட்டின் ஏனைய வங்கிகளின் செயற்பாட்டுத்தரத்திற்கு கூட்டுறவு கிராமிய வங்கிகளின் வளங்களும் அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. வடக்குக்கிழக்கு மாகாணத்தின் ஒன்பது கூட்டுறவு வலயங்களில் தற்போது இயங்கி வரும் கூட்டுறவுக்கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை வருமாறு:-

யாழ்ப்பாணம்-30, கிளிநொச்சி-06, முல்லைத்தீவு-06,வவுனியா-02, மன்னார்-06, திருகோணமலை-09,கல்முனை-12. அம்பாறை-10, மட்டக்களப்பு-16 (25)

## தந்தை செல்வாவின் நினைவுநாளையொட்டி திருகோணமலையில் விளையாட்டுப்போட்டி

(திருகோணமலை)

தந்தைசெல்வநாயகத்தின் 27ஆவது நினைவு தினத்தை ஒட்டி ஏப்ரல் 26 ஆம் திகதி திருகோணமலை நகரில் சிவன்கோவிலடி இளைஞர் அமைப்பு பல நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது.

காலை நிகழ்வுகள் திருகோணமலை சிவன் கோவிலடியில் அமைந்துள்ள தந்தை செல்வா சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்வதுடன் ஆரம்பமாகும். பின்னர் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும் 17வயதுக்கு உட்பட்டவர்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி இடம்பெறும் மாலை 7மணி தொடக்கம் மின்னொளியில் தலையணைச்சமர், வழுக்குமரம் ஏறுதல்,கயிறு இழுக்கும் போட்டி (பத்து பேர் கொண்ட அணி) ஆகியன இடம் பெறும். போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் ஏப்ரல் 24 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்பாக எஸ். மணிவண்ணன்,சிவன்கூல் ஸ்போட்.230, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை (சிவன்கோயில் முன்பாக) என்ற விலாசத்தில் தங்கள் விண்ணப்பப்படிவங்களை ஒப்படைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தந்தை செல்வா நினைவு தினநிகழ்வுகளை திருகோணமலை சிவன்கோயிலடி இளைஞர் அணித் தலைவர் சுப்ராவும் அணியின் ஏனைய உறுப்பினர்களும் ஒழுங்கு செய்துவருகின்றனர். திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், க.துரை ரட்ணசிங்கம் ஆகியோர் முக்கிய அதிதிகளாக இந்நிகழ்வில் பங்குபற்றுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## காணி உரிமப்பத்திரம் வழங்கல் நாளை முதல் 30ம் திகதிவரை நடைபெறும்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச காணிச்செயலகத்தினால் தற்காலிக காணி அனுமதிப்பத்திரங்களை நிரந்தரக் காணி உரிமப்பத்திரம் (LDO) பொமிற் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. இதனடிப்படையில் நாளையும் நாளை மறுதினமும் உதயநகர் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து உதயநகர் மேற்கு கிராமமக்களுக்கான காணி உரிமப்பத்திரம் சம்பந்தமான நடவடிக்கைகளும்22ந் திகதியன்று விவேகானந்தநகர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் விவேகானந்த நகர் காணிகள் சம்பந்தமான நடவடிக்கைகளும் . 23ம்திகதி உதய நகர் கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத் தில் உதயநகர் கிழக்கு கிராம காணிகளுக்கான நடவடிக்கைகளும் .30ம் திகதி திருநகர்கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் வைத்து திருநகர் கிராமகாணிகளுக்கான நடவடிக்கைகளும் நடைபெறவுள்ளதென கரைச்சி பிரதேச காணி உத்தியோகஸ்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில், முன்னைய நாட்களில் பதிவுகளை மேற்கொள்ளத் தவறிய அந்த ந்தக்கிராம மக்கள் தவறாது சமூகம் கொடுத்து பதிவுகளை மேற்கொள்ளும்படியும் வேண்டியுள்ளார். (சோ)

## மன்னாரில் விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சி

மன்னார் விவசாயத் திணைக்களத்தினரால். மன்னார் உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) காரியாலயத்தில் விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சி எதிர்வரும் 20ம் திகதி முதல் 23ம்திகதி வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.மேற்படி நான்கு நாட்கள் நடைபெறவுள்ள விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சியில் உவர்நிலம்சார்ந்த கரையோரப் பகுதி களிலும் வதிவிட வேளாண்மை மூலம் மரக்கறிப்பயிர்ச்செய்கையினை மேற் கொள்ளும் வகையில் பொதிகளில் நாற்றுக்கள்,மரக்கறிப் பயிர்கள்,இலை மரக்கறிப்பயிர்கள்,கொடிப் பயிர்கள்,மேல்நாட்டு மரக்கறிப்பயிர்கள்,பொதிநாற்று மேடை வகைகள், சேதன அசேதன திரவப் பசளைகள் , நீர்ப்பாசன முறைகள் இதுபோன்ற இன்னும் பல இக்கண்காட்சியில் வைக்கப் பெற்று விவசாயப்பெருமக்களுக்கு சிறப்பான முறையில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

மேற்படி நான்கு நாட்களிலும் பாடசாலை மாணவ மாணவிகளுக்கான விவசாய வினாவிடைப் போட்டியும் அதனைத் தொடர்ந்து இறுதிநாளன்று பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளதென மன்னார் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) எஸ்.எம்.ஹுசைன் தெரிவித்துள்ளார். (சோ)

## மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

2004ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரத்தேர்விலே வரலாறு, வர்த்தகம், அளவையியல் பாடங்களுக்குத்தோற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு,துணுக்காய் வலய மாணவர்களுக்கான தேர்வு வழிகாட்டற் கருத்தரங்கு யாழ்.நகரிலிருந்து வரும் முன்னோடிவள.அணியினரால் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் (19,20ஆம் நாட்களில்)நடைபெறஇருக்கின்றன.

தமிழீழக்கல்விக்கழகத்தினால் தமிழீழ மாணவர் அமைப்பின் உதவியுடன் நடைபெறவிருக்கும் மேற்படி தேர்வு வழிகாட்டற்கருத்தரங்கு புதுக்குடியிருப்பு ம.வி.யில் வரலாறு, வர்த்தக பாடங்களுக்கும் கிளிநொச்சியில் அளவையியல். வர்த்தக பாடங்களுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

துணுக்காய் வலயத்தைச் சேர்ந்த மேற்படி பாடங்களுக்குத்தோற்றும் மாணவர்கள் கிளிநொச்சியிலோ புதுக்குடியிருப்பு ம.வியிலோ விரும்பிய இடங்களிற்பங்கு பற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

## 'நீர்ப்' திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டானில் உதவி.அரச.அதிபர் பணிமனை அமைப்பு

(ஒட்டுசுட்டான்)

"ரிவிபல" நடவடிக்கை மூலம் முற்றாக சேதமாக்கப்பட்ட ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பணிமனை "நீர்ப்"திட்ட நிதியின்கீழ் 90 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு அமைக்கப்படுகின்றது.

தனியார் வீடொன்றில் இயங்கும் இவ் உதவி அரச அதிபர் பணிமனை பலஇடநெருக்கடியினை சந்திப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (05)


## இலவச கணினிப் பயிற்சிநெறி- பயிற்சியாளர் நேர்முகத் தேர்வு

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளி வலயக்கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப்பிரிவினால் நடாத்தப்படவுள்ள இலவச கணினிப் பயிற்சி நெறிக்கான பயிற்சியாளர் தேர்வு.

21-04-2004 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கிளி/வலயக் கல்விப்பணிமனையில் நடைபெறும்.

- சுயவிபரம் அடங்கிய விண்ணப்பப்படிவம்
- கல்வித்தகைமைச் சான்றிதழ்கள்
- தொழிற்தகைமைச் சான்றிதழ்கள்
- பிறப்புச்சான்றிதழ்
- தேசிய அடையாள அட்டை
- ஏனைய பொருத்தமான ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

தகைமை:- க.பொ.த சா.த பரீட்சையில் தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் தேர்ச்சி

ப. அரியரத்தினம்
வலயக்கல்விப்பணிப்பாளர்
கிளிநொச்சி

(சி.9376)


## சம்பள உயர்வு

தேங்காய் உற்பத்தி தொழில்த் துறையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு 15 சதவீத சம்பள அதிகரிப்பை வழங்க தொழில்உறவுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி இத்தொழிலாளர்களுக்கு 500 ரூபா சம்பள உயர்வு கிடைக்கும்.இதனை நேற்று முன்தினம் பதவி ஏற்றுள்ள அமைச்சர் அதாவுடசெனவிரத்ன கூறியுள்ளார்.


## நற்செய்தி கருத்தரங்கு

நாள்:–19–04–2004 (திங்கட்கிழமை)
நேரம்:– மாலை 4.30 தொடக்கம்6.30 வரை
இடம்:– கருணாநிலையம்,கிளிநொச்சி (காவல்பணிமனைக்கு முன்பாக)
நற்செய்தியாளர் – சகோதரன் பிரடி ஜோசப் (இந்தியா)
இக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெற்றுச் செல்லுமாறு அனைத்து மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சபைக்குருவானவர்
தூயபவுளின் ஆலயம், கருணாநிலையம் கிளிநொச்சி. (4441)



சிவமயம்

## அருள்மிகு கனகாம்பிகை அம்மன் பெருங்கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு நடைபெறும்

## சைவநெறித் திறனாய்வுப்போட்டி -2004

திருநெறிக் கழகத்தால் நடாத்தப்படும் இப்போட்டி பற்றிய விபரம் வினாக்கொத்தில் உள்ளது. 19.04.2004 இல் இருந்து வினாக்கொத்தை ரூபா 10/= செலுத்திப்பின்வரும் இடங்களில் பெறலாம்

(1) செந்தூரன் களஞ்சியம்- கிளிநொச்சி
(2) இலக்கியா புடவையகம்- வட்டக்கச்சி
(3) பிள்ளையார் பொத்தகசாலை-கிளிநொச்சி

*முடிவுத்திகதி 28-04-2004.*

அறங்காவலர்சபை,
ஸ்ரீ கனகாம்பிகை தேவஸ்தானம்,
இரணைமடு கிளி. (4442)

திருநெறிக்கழகம்,
கிளிநொச்சி.



### சிந்தனைக்கு

நாங்கள் ஒரு உன்னத இலட்சியத்திற்காகப் போராடி வருகின்றோம். அந்த இலட்சியத்திற்காக உழைப்பதும் வாழ்வதும் எங்களுக்குப் பூரண ஆத்ம நிறைவைத் தருகிறது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 18-04-2004

# சிலரின் கவலை!

கருணா காப்பாற்றப்படாமல் போனமை இலங்கைக்கு உள்ளும், வெளியிலும் சிலருக்குப் பெருத்த ஏமாற்றத்தையும், கவலையையும் கொடுப்பதாகிவிட்டது. இதனைச் சிலர் வெளிப்படையாகக் கூறத் தவறவும் இல்லை. இவர்களின் ஆதங்கத்திற்கு விடுதலைப்புலிகளுக்கும், தமிழ்த்தேசியத்திற்கும் எதிரான ஒரு சக்தி பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டு விட்டது என்பதே காரணம் ஆகும்.

இது குறித்து சிறிலங்காவில் வெளிப்படையாக தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரான வண.அத்துரலிய ரதன தேரர், "விடுதலைப் புலிகளைக் கையாள்வது தொடர்பான விடயத்தில் சனாதிபதி சந்திரிகாவிற்கும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் எந்தவொரு கொள்கை மாற்றத்தையும் தம்மால் காண முடியவில்லை எனத் தெரிவித்ததோடு, யுத்த நிறுத்தத்தை அமுல் செய்ததன் மூலம் கருணா அணியினரைத் தோற்கடிக்க புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு புதிய அரசாங்கம் உதவியுள்ளது" எனவும் சாடியுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கூறுவது போன்று புதிய அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை உளப்பூர்வமாகக் கடைப்பிடித்ததாகவோ அன்றி கருணா குழுவிற்கு உதவாமல் இருந்தது என்றோ கொள்வது தவறாகும். சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் தன்னால் இயன்றளவில் கருணா குழுவிற்கு உதவியது என்பதும், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதற்குப் புலிகள் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவார்கள் எனக் காத்திருந்தது என்பதுமே உண்மையாகும்.

ஆனால், தமிழீழத் தேசியத் தலைவர் இவ்விவகாரத்தை மிகவும் நேர்த்தியாகவும், துல்லியமாகவும் கையாண்டமையே சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பால் யுத்தத்தில் ஈடுபடவோ, சனாதிபதி சந்திரிகாவால் யுத்தத்தில் ஈடுபடுமாறு படையினரைப் பணிக்கவோ முடியாமல் போனது என்பதே உண்மை நிலையாகும். செய்தி ஊடகங்களும் அரசியல் மற்றும் இராணுவ விமர்சகர்களும் விடுதலைப்புலிகளுக்கும் – சிறிலங்காவிற்கும் எவ்வேளையிலும் யுத்தம் வெடிக்கலாம் என ஆருடம் கூறிக் கொண்டிருக்கையில் விடுதலைப்புலிகளோ சத்தமின்றி, இரத்தமின்றி தமது கட்டுப்பாட்டை விரிவுபடுத்தினர்.

சிறிலங்காவில் ஹெல உறுமய, இவ்வாறு அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுகையில், தமிழகத்திலிருந்து வெளிவரும் இந்துப் பத்திரிகையோ, கருணாவைக் காப்பற்ற நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களோ நோர்வே தலைமையிலான யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரோ தவறிவிட்டனர் எனக் குற்றம் சாட்டியுள்ளது. யுத்த நிறுத்தம் விடுதலைப்புலிகளுக்கும் – அரசாங்கத்திற்கும் பட்டுமானதே எனக் கண்காணிப்புக் குழு கூறியது தவறு என இந்து சாடுகின்றது.

இவ்வாறு இந்து தனது ஆசிரியர் தலையங்கத்தில் சாடுவதற்குக் காரணம், கருணா மீதான அனுதாபம் என்பதைவிட விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பது உறுதியாகி வருகின்றமையே மூல காரணமாகும். இதன் விளைவாகவே அண்மையில் நடந்த தேர்தலில் வடக்கு--கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பெற்ற வெற்றியையும் அது கேள்விக்குள்ளாக்குவதோடு அத்தேர்தல் சனநாயக முறையில் நடந்ததல்ல எனவும் குற்றம் சாட்டவிளைகின்றது.

கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியைப் பெற்றுக் கொண்டமையும் கருணா இவ்வளவு விரைவாக ஓட வேண்டி வந்தமையும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் எதிரான சக்திகளுக்கும் ஜீரணிக்க முடியாததொன்றே ஆகும். அதிலும் நீண்ட காலமாகவே விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும் எதிரான நிலைப்பாட்டை எடுத்துவரும் "இந்து" போன்ற பத்திரிகைகளுக்கு இது ஜீரணிக்க முடியாது போனது ஆச்சரியத்திற்குரியதல்ல.

இம்முறை தேர்தல் அறிவிக்கப்பட்டபோது எவ்வாறேனும், விடுதலைப்புலிகளின் ஏக பிரதிநிதித்துவம் என்பது கேள்விக்குள்ளாக்கப்படும் என்பதே 'இந்து' போன்றவற்றின் எதிர்பார்ப்பாக இருந்தது. இதற்கென சில சக்திகளை உருவாக்குவதற்கு இவர்கள் பின்னணியில்கூட இருந்தார்கள். அதேவேளை, "கருணாவின்" அறிவிப்பும் அவர்களுக்குப் பேருவகையாக இருந்தது. தமிழீழத் தேசியத் தலைமை என்பதும் ஏக பிரதிநிதித்துவம் என்பதும் இத்தேர்தலோடும், கருணாவுடனும் முடிவிற்கு வந்துவிடும் என்றே அது கருதியது.

இந்நிலையில் தான், தேர்தல் நடைமுறை பற்றி 'இந்து' விமர்சிக்கத் தொடங்கியுள்ளது. சிறிலங்கா தேர்தல் ஆணையகமும், சர்வதேச கண்காணிப்பாளர்களும் தேர்தல் குறித்து நல்லபிப்பிராயம் வெளியிட்டிருக்கையில், இந்து தேர்தல் பற்றிக் குறை காண விளைவது ஆதங்கத்தின் வெளிப்பாடே ஆகும். பெரும்பாலும் நீதியாக நடைபெற்ற இத்தேர்தலில் சிறிதளவு முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக வைத்துக் கொண்டாலும்கூட இந்திய இராணுவம் வடக்கு–கிழக்கு மாகாணங்களில் நிலைகொண்டிருந்த போது நடந்த தேர்தலில் இடம்பெற்றது போன்ற ஊழலோ, மோசடிகளோ இம்முறைத் தேர்தலில் இடம்பெற்றதில்லை எனத் துணிந்து கூறமுடியும்.

ஆனால், நடந்து முடிந்தவை எல்லாம் அவர்களுக்குப் பெரும் ஏமாற்றமாயிருப்பவையாகிவிட்டன. தமிழீழத் தேசியத் தலைமை என்பதும், ஏக பிரதிநிதித்துவம் என்பதும் தேர்தலின் பின் வலுவாக உறுதிப்படுத்தப்பட்டதொன்றாகிவிட்டது. அது மட்டுமல்ல, தமிழர் தாயகம் பிரிக்கப்பட முடியாததென்பதும் தமிழர் தேசியம் என்பது தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் பல சிறிய முரண்பாடுகளுக்கும் அப்பாற்பட்டதொன்று என்பதும் வெளிப்படுத்தப்பட்டதொன்றாகி விட்டது.

இந்நிலையில், இந்து போன்றவற்றிற்கு நாம் தெரிவிக்கக் கூடியது ஒன்றே. கடந்த காலத்தைப் போன்று இந்திய அரசாங்கத்தைத் தவறான வழியில் வழி நடத்திச் செல்ல முற்பட வேண்டாம் என்பதே அதுவாகும். கடந்த காலத்தில் இந்திய அரசு தமிழ் மக்கள் விவகாரத்தில் கையைச் சுட்டுக் கொண்டமைக்கு 'இந்து' போன்றவை தவறான வழியில் அரசாங்கத்தை வழி நடத்தியமையே காரணமாகும். ஆகையினால், மீண்டும் இந்தியாவில் இருந்து தமிழ் மக்களை அந்நியப்படுத்துவது போன்ற செயல்களைச் செய்ய வேண்டாம் என்பதே எமது கோரிக்கை ஆகும். இதுவே இந்தியாவின் நலனுக்கும் இலங்கைத் தமிழ் மக்களின் நலனுக்கும் உகந்ததாகும்.

# தமிழீழம் மறவாத தாய்க்குலத்தின் தலைவி



தமிழீழம் மறவாத
தாய் குலத்தின் தலைவியாய்
தரணி போற்ற வாழ்ந்திருப்பாய்
பூபதித் தாய் எம் தாயே.

எண்ணிரண்டு ஆண்டின் பின்னும் - எம்
எண்ணமதில் நீ வாழ்வாய் - உன்
கண்ணான தமிழீழம்
கலங்கி நின்று அழுகுதம்மா.

காந்தி தேசம் நிச்சயமாய்
கண்ணிரங்கும் என்று நீயும்
உண்ணா நோன்பிருந்து
உறுதியுடன் போர் தொடுத்தாய்.

இந்தியத்தின் வஞ்சகத்தை
இடித்துரைத்து நீ - நின்றாய்
அகிம்சை நாட்டின் அராஜகத்தை
துவம்சம் செய்ய நீ மரித்தாய்.

விடுதலைப் போர் வரலாற்றில்
விழுதாக நீ நின்றாய்
பெண்இனத்தின் விடிவினிற்காய்
கண்ணியமாய் குரல் கொடுத்தாய்.

தென் தமிழீழம் தன்னில்
தென்றலாக நின்றவளே
உரிமைப் போர் வரலாற்றில்
எரிமலையாய் பதிந்து விட்டாய்.

புலிக்குலத்தின் புதுத்தாயே.
பூவையரின் புது நெருப்பே.
சரித்திரத்தில் உன் பெயரை
சித்திரமாய் படைத்துவிட்டாய்.

எம் தலைவன் வழியினிலே
எங்கள் படை களத்தினிலே
உன் நினைவை சுமந்திங்கு
உறுதியுடன் நடக்கின்றோம்.

முத்தையனூர்
ப. துஸ்யந்தன்

# தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில்
# தேசிய அரசு செயற்படக் கூடியதாக இருக்க வேண்டும்

## பா. உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்

சிறிலங்கா நாடாளுமன்றில் தேசிய அரசாங்கம் ஒன்று வருமானால் அது தமிழ் மக்களின் பிரச்சினையை உள்வாங்கி அதற்குத் தீர்வு காணும் வகையில் செயற்படக் கூடியதாக இருக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கூறியுள்ளார்.

அவ்வாறான அரசு தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக குறிப்பாக, சமாதானப் பேச்சுவார்த்தையினை எந்தளவுக்கு முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்ற வகையில் அமையும் என்பதைப் பொறுத்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தேசிய அரசு சம்பந்தமாக தனது முடிவை வெளிப்படுத்தும்.

சிங்களப் பேரினவாத கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும், ஜாதிக ஹெல உறுமயவும் இணைந்து சிறுபான்மை தமிழ் இனத்தை ஒடுக்கும் வகையில் செயற்படும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும், இவற்றை முறியடிப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு தீவிரமாக ஆராய்ந்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கம் தெரிவித்துள்ளார். தமிழ் தேசியம், தமிழ் மக்களின் தாயகக் கோட்பாடு, சுயநிர்ணய உரிமை, விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகத்துக்கான இடைக்கால நிர்வாக அலகு ஆகிய வற்றை-சிறிலங்கா அரசு அங்கீகரிக்க வேண்டும் என்பதே கூட்டமைப்பின் முக்கிய கோரிக்கையாகும். இக்கோரிக் கைகளை சிறிலங்கா அரசு அங்கீகரித்து நடைமுறைப் படுத்துவதற்கான அழுத்தத்தை அரசுக்குக் கொடுக்கும் வகையில் சர்வதேச இராஜதந்திரிகளையும், வெளிநாடுகளின் தூதுவர்களையும் சந்தித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெளிவு படுத்துவ ...ன்றும் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

### தேசியப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்படாதோர்

# பா.உ.களாக நியமிக்கப்படுவதற்கு எதிராக வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

தேசியப்பட்டியலுக்காக ஏற்கனவே பெயர்குறிப்பிடப்படாதவர்கள் பின்னர், தேசியப்பட்டியலில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கு எதிராக மாற்று கொள்கைக்கான நிறுவனம் நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளது. தேர்தல் சுயாதீன ஆணை அமைக்கப்படாமையால், இதனை தடுப்பதற்கு தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என மாற்றுக் கொள்கைக்கான நிறுவனம் தமது மனுவில் கோரியுள்ளது. மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணையாளர், முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஆகியோரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். (32)

# மெக்ராத்தின் வரவு காஸ்ப்ரோவிச்சைப் பாதிக்காது



வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் ஆஸி. அணிக்குத் திரும்பினாலும் மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான மைக்கல் காஸ்ப்ரோவிச்சிற்கு அதனால் பாதிப்பு இல்லையென அவுஸ்திரேலியா கிரிக்கெட்டின் தேர்வுக் குழுத் தலைவரான ரெவோர் ஹான்ஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் சிம்பாவ்வே பயணம் மேற்கொள்கிறது. கணுக்கால் வலியால் துன்புற்று குணமடைந்துள்ள மெக்ராத் இந்தத் தொடரின் போது ஆஸி. அணிக்குத் திரும்புவுள்ளார். பிரெட் லீ வில்லியம்ஸ் அல்லது ஷொன் டெய்ட் இருவரில் ஒருவருக்குப் பதிலாக மெக்ராத் அணிக்குத் திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

டெஸ்ட் போட்களில் இதுவரை 430 விக்கெட்டுக்களை மெக்ராத் வீழ்த்தியுள்ளார். கிலெஸ்பி, காஸ்பரோவிக்ஸ் இருவருடனும் இணைந்து மெக்ராத் ஆஸி. அணியின் வேகப் பந்து வீச்சைப் பலப்படுத்தவுள்ளார்.

கடந்த 9 மாதங்களாக அணியில் இல்லாமலிருந்து வந்த மெக்ராத் மீண்டும் தனது திறமையை நிரூபிக்க வேண்டியது அவசியமாகியுள்ளது. யாராவது ஒரு வேகப்பந்து வீச்சாளர் அணியைவிட்டு வெளியேறினால்தான் அணியில் மெக்ராத் இடம்பிடிக்க முடியும் என்ற நிலையில் காஸ்பரோவிக்ஸ் அணியில் தொடர்ந்து நீடிப்பார் எனத் தெரிகிறது. ஏனெனில், தேர்வுக் குழுத் தலைவர் தனது முழு ஆதரவினை காஸ்பரோவிக்ஸிற்குத் தெரிவித்துள்ளார்.

ஆயினும் இது அணித் தலைவர் முடிவு என அவர் கூறியுள்ளார். அண்மையில் தனக்குக் கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் காஸ்பரோவிக்ஸ் நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டார் எனவும், இதற்கு முன்பு இருந்ததைவிட தற்போது அவர் நல்ல தரத்துடன் இருக்கிறார் எனவும் ஹொரான்ஸ் கூறியுள்ளார்.

# பொறுப்பேற்கப்படும் போராளிகளின் வாழ்வு மேம்பாட்டிற்கும் யுனிசெவ் பொறுப்பு

### – திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக்

(திருகோணமலை)

"விடுவிக்கப்படும் போராளிகளைப் பொறுப்பேற்பதுடன் யுனிசெப் அமைப்பின் பொறுப்பு முடிந்துவிடக் கூடாது. பொறுப்பேற்கப்படும் போராளிகளின் வாழ்வு மேம்பாட்டுக்காக யுனிசெவ் அமைப்பு அதற்கான பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் நாம் போராளிகளை விடுவிக்கும் நோக்கம் நிறை வேறும்" இவ்வாறு விடுதலைப்புலி களின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் 40 போராளிகளை விடுவிக்கும் நிகழ்வில் பங்கு பற்றிப் பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது "சில வாரங்களுக்கு முன்பு நாம் 35 போராளிகளை விடுவித்து யுனிசெவ் அமைப்பிடம் கையளித்தோம். இப் போதும் போராளிகளை விடுவித்து யுனிசெவ்விடம் கையளிக்கின்றோம். மூன்று காரணங்களுக்காக இளைஞர், யுவதிகள் எமது இயக்கத்தில் சேருகின்றார்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக, படிக்க முடியாத நிலை, பொருளாதாரக கஷ்டம் மூன்றாவது உணர்வுபூர்வமாக போராட்டத்துடன் இணைந்து கொள்வது. விடுவிக்கப்படும் போராளிகள் மீண்டும் இக்காரணங்களுக்கு ஆளாகாது பார்த்துக்கொள்ள வேண்டியது அவர்களைப் பாரமெடுக்கும் யுனிசெப் அமைப்பின் கடமையாகும்.

போராளிகளை விடுவிப்பது தொடர்பாக யுனிசெப் அமைப்பும் விடுதலைப் புலிகளும் உருவாக்கியுள்ள திட்டத்தின் வெற்றி யுனிசெவ் அமைப்பின் எதிர்காலச் செயற்பாட்டில்தான் தங்கியுள்ளது. நாங்கள் விடுவித்து யுனிசெவ் அமைப்பிடம் கையளித்த போராளிகள் சிலர் மீண்டும் எம்மிடம் வந்து சேர்ந்துள்ளார்கள். காரணம் விடுவிக்கப்பட்ட பின்னர் அவர்கள் வாழ்க்கை வளம்பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை யுனிசெப் எடுப்பதற்குத் தவறியதுதான் இதனை யுனிசெவ் அமைப்புக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அப்போது நாம் விடுவிக்கும் போராளிகளின் புனர்வாழ்வுத் திட்டம் வெற்றியடையும் என்று திலக் தெரிவித்தார்.

யுனிசெவ் திருமலை பிரதிநிதி கபிரியெலா எல்றோய் பேசுகையில், வயது குறைந்த போராளிகளை விடுதலைப்புலிகள் இன்று விடுவிப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. விடுவிக்கப்படும் போராளிகள் அவர்களின் குடும்பத்தினருடன் சேர்ப்பிக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்படும் என்றார். புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் கோ.மாதவராசாவும் பேசினார். சம்பூரில் வைத்து விடுதலைப்புலிகளால் விடுவிக்கப்பட்ட போராளிகளை தனி பஸ்சில் யுனிசெவ் அதிகாரிகள் ஏற்றிக்கொண்டு சனிக்கிழமை பிற்பகல் புறப்பட்டனர். யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகளும் விடுவிக்கப்படும் போராளிகளைப் பொறுப்பேற்பதற்காக அம்புலன்ஸ் சகிதம் சம்பூர் வந்திருந்தனர்.

விடுவிக்கப்பட்ட போராளிகள் அவர்களின் பெற்றோருடன் சேர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் உடனே மேற்கொள்ளப்படும் என்று யுனிசெவ் திருமலைப் பிரதிநிதி கபிரியெலா எல்றோய் தெரிவித்தார். (25)

# புலிகள் இல்லாத பகுதிகளில் சூனியப் பிரதேசம் ஏன்?

### – இடம்பெயர்ந்தோர் நலன்புரி அமைப்பு கேள்வி

வலிகாமம் வடக்கின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்க பாதுகாப்பரண் பகுதிக்கு முன்பாக உள்ள 600 மீற்றர் பகுதியை சூனியப பிரதேசமெனக் காட்டி மீளக் குடியமரும் குடும்பங்கள் மீதான கெடுபிடிகளை படைத்தரப்பு அதிகரித்து வருவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. படையினரின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் முழுமையாக குடாநாடு உள்ள நிலையில் இவ்வாறான சூனியப்பிரதேசம் ஏன் அமைந்துள்ளது? எனவும் வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தோர் நலன்புரி அமைப்புக்களது பிரதிநிதிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

எதிர்த்தரப்பான விடுதலைப்புலிகளது நிலைகளோ அல்லது பிரசன்னமோ வலி வடக்கில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதிகளில் இல்லை. அத்துடன் முன்னரங்க பாதுகாப்பரண் பகுதியைத் தாண்டி வெளியார் எவருமே உயர் பாதுகாப்பு வலயத்தினுள் பிரவேசிக்கவும் முடியாது. இந்நிலையில் இவ்வாறான சூனியப்பிரதேசம் அநாவசியமற்றதோர் விடயம் எனவும் அத்தரப்புகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதனிடையே வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்டுள்ள 600 மீற்றர் தூரத்திற்கு வெளியே உள்ள பகுதியில் மீளக் குடியமர்ந்த 8குடும்பங்களை அங்கிருந்து வெளியேறுமாறு படையினர் நிர்ப்பந்தித்து வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. பனாலை கிராமத்தில் அண்மைக்காலப பகுதியில் மீளக்குடியமர்ந்த இக்குடும்பங்கள் தம்மிடம் உரிய அனுமதியை மீளக்குடியமரப் பெற்றுக்கொண்டிருக்கவில்லையென கூறியே படையினர் அவர்களை வெளியேறுமாறு வற்புறுத்தி வருகின்றனர். (27)

# அமைச்சர்கள் தாம் விரும்பிய பொலிசாரை பாதுகாப்பிற்கு அமர்த்த முடியாது

### -சனாதிபதியின் புதிய ஒழுங்கில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் குறித்து சனாதிபதி அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளார். இதில் அமைச்சர்கள் தாம் விரும்பும் பொலிசாரை தமது பாதுகாப்பிற்கு நிறுத்த முடியாது என்பது உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

மேற்படி அறிவுறுத்தலை சனாதிபதி செயலகம் நேற்று வெளியிட்டுள்ளன.

இதன் அடிப்படையில் அமைச்சரோ அல்லது பிரதி அமைச்சரோ பிரத்தியேக கடமைக்கு தமது உறவினர்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது. அமைச்சர்கள் இரண்டு உத்தியோக பூர்வ வாகனங் களை மாத்திரமே பயன்படுத்தமுடியும். பலத்த பாதுகாப்பு தேவைப்படுபவர்கள் இரண்டு வாகனங்களே பயன்படுத்தலாம் அதேவேளை உத்தியோக பூர்வவாகனங்களை அமைச்சர்கள் தமது சொந்தசெயற்பாடுகளுக்கு பயன்படுத்தமுடியாது.

பொலிஸ் திணைக்களம் அமைச்சர்களின் பாதுகாப்பிற்காக பரிந்துரைக்கும் பொலிசார் மாத்திரமே பாதுகாப்பை வழங்குவர் அமைச்சர்கள் தங்களுக்கு விரும்பியவர்களை பாதுகாப்பிற்கு அமர்த்தமுடியாது. அமைச்சர் ஒருவர் ஒரு வருடத்தில் நான்கு தடவையே வெளிநாட்டு விஜயங் களை மேற்கொள்ளலாம் என சனாதிபதியால் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க திணைக்களங்கள் மற்றும் திணைக்களங்களின் பணியாளர்கள் தலைவர்கள் ஆகியோரை இடமாற்றம் செய்யும் போது அமைச்சர் ஒருவர் அது தொடர்பில் தம்மோடு கலந்துரையாட வேண்டும் என சனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதேவேளை இவ்விடயத்தில் எந்தவித அரசாங்கஇடமாற்றங்களும் மேற்கொள்ளக்கூடாது எனவும் வலியுறுத்தியுள்ள சனாதிபதி அமைச்சர்கள் அரசாங்க திணைக்களங்கள் தொடர்பான தேவைக்கு கூலிக்கோ வாடகைக்கோ எந்தவொரு கட்டடங்களையும் அனாவசியமாக பெற்றுக் கொள்ளக் கூடாது எனவும் தெரிவித்துள்ளதுடன் இது தொடர்பான சுற்று நிருபம் வெகுவிரைவில் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# நடிகை செளந்தர்யா உட்பட நால்வர் விமான விபத்தில் பலி!



விழ்ந்து நொருங்கிய விமானம்

(புதுடில்லி)

பிரபல தென்னிந்திய சினிமா நடிகை செளந்தர்யா உள்ளிட்ட நால்வர் பெங்களூரில் நேற்று இடம் பெற்ற விமான விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

செளந்தர்யாவின் சகோதரரும் பா.ஜ. கட்சி பிரமுகர் ஒருவரும் மற்றும் விமானியுமே ஏனையை மூவராகும்.

பா.ஜ.கட்சிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வதற்காக ஆந்திரா மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் கூட்டதிற்கு செல்வதற்காக வந்த வேளையே விமானம் விபத்திற்குள்ளாகியுள்ளது.

விமானம் பறப்பை ஆரம்பித்த சில நிமிடங்களிலேயே விமானம் தீப்பிடித்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

### -நடைபெறவுள்ளவடமேல் மா.சபைத்தேர்தலில்-

# வாக்களிப் போருக்கு மோதிர விரலில் மைபூச முடிவு

(கொழும்பு)

எதிர் வரும் 24ம் திகதி நடைபெறவுள்ள வடமேல் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு இம்முறை மோதிர விரலில் மை பூசப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் சுட்டு விரலில் பூசப்பட்ட மை பெருமளவானோருக்கு இன்னமும் அழியாமல் இருப்பதே இதற்கு காரணம் எனத் தெரிவித்துள்ள தேர்தல் ஆணையாளர் இது பாதகத்தை ஏற்படுத்தும் என்பதால் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது சிறிலங்கா தேர்தல் வரலாற்றில் முதற்தடவை மேற்கொள்ளப்படும் நடவடிக்கை.

மேற்படிதேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே வெற்றி பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில் மத்திய அரசாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இருப்பதே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான முறுகல் இன்னமும் தீர்க்கப்படாத நிலையில் தேர்தல் முடிவுகளில் மாற்றம் வரலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# தேர்தலுக்கு மக்களை ஒழுங்குசெய்த குழுக்களுக்குப் பாராட்டு விழா

நடந்து முடிந்த பொதுத்தேர்தலுக்கு மக்களை ஒழுங்கு செய்த கிளிநொச்சி, பரந்தன் பிரதேசங்களைச் சேர்ந்த குழுக்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 11 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் முரளி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றுள்ளது.

# எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்து அரசை ஆதரிக்க இரு கட்சிகள் முடிவு

(கொழும்பு)

சிறிய கட்சிகளான இ.தொ.கா., ஜாதிக ஹெலஉறுமய சிறில. மு.கா. ஆகியன கலந்துரையாடி பொதுவான ஒரு புரிந்துணர்வுக்கு வந்திருப்பதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி ஜா. ஹெல உறுமய, சிறில. மு.கா. தற்போதைய ஐ. ம.சு. முன்னணி அரசில் எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்து கொண்டு அரசுக்கு நியந்தனையுடன் ஆதரவளிப்பது என முடிவு செய்துள்ளன. இ.தொ. கா. இதுவரை எதுவித முடிவுக்கும் வராதிருக்கிறது.

# 10 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டுவந்த 10பேர் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பணியகத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் இவர்கள் அனைவரும் பாதாள உலக கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என்றும் குற்றப்புலனாய்வுப் பணியகம் தெரிவித்துள்ளது.

## திருமலைக்கு...

ளைத் தளபதி மேஜர்ஜெனரல் சுனில்தென்னக்கோன், சிறிலங்கா கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதி ஆகியோரை தனித்தனியாக சந்தித்து திருகோணமலை மாவட்டத்தின் பாதுகாப்பு நிலவரங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

## கோஷ்டி...

அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமான நிலையில் உள்ளதால் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மேலதிகசிகிச்சைக்காக இடம மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஈ.பி.டி.பி.

பட்டுள்ளது. தீவுப்பகுதியிலிருந்து ஈ.பி.டி.பியினர் வெளியேற வேண்டுமென்ற கோசம் அங்கு வலுவடைந்து வரும் நிலையில் ஈ.பி.டி. பியினருக்கும், பொதுமக்களுக்கும் இடையே மோதல்களும், முறுகல் நிலையும் ஏற்பட்டு வருகின்றது. இதேவேளை கடந்த புதன்கிழமை தம்பாட்டிப் பகுதியில் கூடிய பொது அமைப்புக்கள் பல தீவுப்பகுதியிலிருந்து ஈபிடிபி. யினர் வெளியேற வேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளனர்.

## மட்டு-அம்பாறை...

பாளர் கௌசல்யன் இந்தத் தகவலை வெளியிட்டார். இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட வர்த்தகர்களுடன், ஊடகவியலாளர் களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சு.கட்சி...

குணத்திலக, அனுரா திஷாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டதாகவும் அவ் விணையத்தளம் கூறுகிறது

இதேவேளை ஜே.வி.பி.யின் அமைச்சர்கள் நால்வரும் பதவிப் பிரமாணம் செய்து கொள்வதற்கு வாய்ப்பில்லை எனவே எதிர்வரும் 22ம் திகதி தீர்மானத்துக்குரிய நாளாக அமையலாம் என ஜே.வி. பி.யின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் இராமலிங்கம் தெரிவித்துள்ளார். (32)

## கேணல்...

தின் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் பல்வேறு இடங்களுக்கும் சென்றுபார்வையிட்டதுடன், மக்களுடனும் கலந்துரையாடினர்.

## தியாகி...

இதேவேளை குடாநாட்டில் வடமராட்சியில் மூத்தவிநாயகர் கோவில் முன்றல், யாழ்ப்பாணம் முத்திரைச்சந்தி, கேணல் கிட்டு பூங்கா, தீவகத்தில் வேலணைதுறையூர், ஐயனார் சனசமூக நிலைய முன்றலிலும், ஊர்காவற்துறைதிறந்த வெளி அரங்கிலும், தென்மராட்சி பகுதியில் சங்கத்தானை முருகன் கோவிலடி முன்றலிலும் நினைவு நாளின் இறுதி நாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட அரசியல்துறையினர் நேற்று விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலும் அன்னை பூபதியின் நினைவுநாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க மன்னார் மாவட்ட அரசியல்துறையினர் ஏற்பாடுசெய்துள்ளனர்.

துணுக்காய், பாண்டியன்குளம், மல்லாவி நகரின் முக்கிய இடங்களில் தியாகி அன்னை பூபதியின் திருவுருவப்படம் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டு மாலை அணிவித்து விளக்கேற்றப்பட்டு மக்கள் நினைவு கூருகின்றனர்.

மேலும் 19ஆம் திகதி வண்ணன் விளையாட்டுக்கழக மைதானத்திலும் பாலிநகர் விளையாட்டு மைதானத்திலும் மாலை 4.00 மணிக்கு இறுதி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது அன்றையதினம் சகல கிராமங்களிலும் உண்ணாவிரத நிகழ்வுகளும் சிரமதானப் பணிகளும் நடைபெறவுள்ளன. (24,பா,மி,33,27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது